KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

3 - OCT. 1931

Vol 4] 1931௵ ஆகஸ்டு௴ 6௳ [No. 31.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 601
2. கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 603
3. நவராத்திரி — ஓர் நாடகம்.
K. N. சுந்தரேசன் B. A. (Hons) 606
4. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-70—80)
K. இராமரத்நம் ஐயர் B.A. 608
5. ஊழ்வினையும் ஆள்வினையும்.
K. நாராயண ரெட்டிகாரு 610
6. ஆண்டாள்—(பிறப்பும் இளமையும்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 612
7. யாப்பிலக்கணம் (சிந்தியல் வெண்பா) 614
8. மானதசாத்திரம் (இடவுணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L. 615
9. வர்த்தமானம். 619

கலாநிலயம்

முனையாமல் தீரும் மூலகாரணம்.

188929

சென்னைக் கிறிஸ்தியர் பெண்கள் கலாசாலைத் தலைமையாசிரியையாயிருக்கும் மிஸ் எலியனோர் மாக்கேல் (Miss Eleanor McDougall) என்பவர், இன்று வியாழக்கிழமை, சென்னைச் சர்வகலாசாலைப் பட்டமளிப்புவிழாவில், செய்த சொற்பொழிவைப் (Convocation address) பெரும்பாலோர் படித்திருப்பர். கலாசாலைகளிற் படிப்புமுற்றி உலகவாழ்க்கையில்புகவிருக்கும் இளைஞர்களுக்கு நல்லறிவுறுத்தி நெறிகாட்டும் நோக்கத்துடன், எல்லாச் சர்வகலாசாலையிலும் ஒவ்வொருவருடமும் இத்தகையதோர் சொற்பொழிவு நிகழ வேண்டுமென்பது மரபாயிருக்கின்றது. மாணவர்க்கும் மற்றுளோர்க்கும் இதனால் எப்பயன் எய்தவல்லதோ யாதோ அறியோம்; எனினும் இக்காலத் துலகவியலை உற்றுநோக்குவார்க்கு உதவவல்ல சில செய்திகள் இதன்பால் தென்படும்.

முதலாவது, கூறியதுகூறல் ஒரு குற்றமாகாதென்பது இச் சொற்பொழிவுகளுக்கெல்லாம் இடையே உறைந்துகிடக்கும் கொள்கையாதல் தெரிகின்றது. "சர்வகலாசாலையில், நீங்கள் கற்றதெல்லாம், வயிற்றுப் பிழைப்பிற்கு வழிதேடும் வகையன்று. செம்மைமுறை திறம்பாச் செய்கையராய் நீங்கள் வாழ்வதற்கே இது வழியாதல் வேண்டும்" என்றென்று எத்தனைமுறை எத்தனைபேர் எத்தனை இடங்களில் இயம்பிக்கொண்டு வருகின்றார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமோ. எனினும், கலாசாலைகளும் ஆசிரியர்களும் பட்டங்களும் குறைவறஇருப்பினும், வயிற்றுப்பிழைப்பைப் பார்க்காமல், மனோ வாக்கு காயங்களின் செம்மையையே கருதி ஒழுகுவார் இந்நாள் உலகடங்கலும் எத்தனைபேர் இருக்கின்றனர் என்பதை யாரும் கணக்கெடுத்துரைப்பதில்லை. உலகம் பலபடி கெட்டுப்போயிற் றென்றுரைப்பார் பலர் உண்மையே. ஆனால், அவர்களிற் சிலர் கல்வியின் குறைவையும், சிலர் கல்வியின் முறையையுங் காரணங்களாகக் காட்டுவார். இவைகளை ஆராய்ந்து, ஏற்றகாரணம் எதுவென்று காட்டுவதன்றோ, சர்வகலாசாலைகளின் சார்பாக நிற்பார் கடன். இதுவுமன்றி, "வயிற்றுப் பிழைப்பிற்கு ஏற்றபடி இப்படசாலைகள் போதிக்காமல், காவியங்களென்றும் கலைகளென்றும் பற்பல வீண்பாடங்களிற் காலத்தைக் கழிப்பதாற்றான், நாம் இந்நிலையில் இருக்கின்றோம்" என்று எதிர்வழக்கிட்டு மன்றாடுவார் ஒருபெரும் பகுதியினர். இவர்களுக்கும், சர்வகலாசாலை சார்பாக ஏற்றவிடை அளிக்கப்பட வேண்டுமென்பது அவசியம். மனமாண்பு மிகும்படி வாழ்க்கையுங் கல்வியும் மற்றுள்ளயாவும்அமைய வேண்டுமென்று வற்புறுத்தும் வாசகங்களெல்லாம், "காரிய சாத்தியமற்ற உயரிய நோக்கங்களென்ற பேரோடு பகட்டாய் விடப்படும் ஆகாசவாணங்களே ஆம்", என்று, 1928ம் வருடம் மைசூர்ப் பட்டமளி

ப்புவிழாவில், ஸ்ரீமான் C. R. இராமலிங்க ரெட்டியாரவர்கள் கட்டுரைத்தார். கட்டுரைத்துப்பின், அவர் ஏற்ற கல்வி எது வென்பதைத் தெரிவிப்பவராய்,

“ஏழைகளுக்கு உண்பதற்கு ஒன்றுமில்லை. பணமுடையவர்களுக்கு எதனை உண்பது என்பது தெரியாது—நெய் அதிகம், சர்க்கரை அதிகம், ‘மசாலைச்சாமான்’ அதிகம்...எல்லாவற்றையுங் கண்டபடி கலந்துண்டு, நோயுற்றுச் சுகமும் வலியும் இழந்துபோவதே இந்தியர்தம் கடனாயிற்று.

ஐரோப்பியர்கள் தின்கின்ற உணவின் தன்மையைப்பற்றிய புத்தகங்கள் எண்ணிறந்தன. இந்தியர்கள் உண்ணும் உணவு, சாஸ்திரப்பிரகாரம் ஆராய்ச்சி செய்யப்படவேண்டும்.

வரவுசெலவுத் திட்டத்தை நேராக நிர்ணயித்து வீட்டுக்கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்தியாவில் விதவைகள் பெரும்பான்மை, அநாதைகளாய்த் தம்உரிமை இன்னதென்பதும் சொத்துவிஷயமான சட்டங்களுந் தெரிந்துகொள்ளாமல், தம்உறவினர்களாகிய ஆடவர்கள் புரியுங் கொடுமைகளுக்கு ஆளாகிக் கிடக்கின்றனர். தம்முடைய உரிமைகளைக் காத்துக்கொள்ளும் சக்தி அவர்களுக்கு இல்லை.”

எனக்கூறுகின்றார். இந்த உணவின் அறிவும் உரிமையின் அறிவும் உடைய பிறநாட்டார் என்ன வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டாவோ அவர் நினைத்ததில்லை. அதனினும் முக்கியமானது வேறொன்றுளது. ஆடவர்கள்,ஏன் அவ்வநாதைகளான மாதர்களுக்குக் கொடுமை புரிகின்றனர். கலாசாலைப்பட்டங்கள் பெற்றவர்வரையிலேனும் இக்கொடுமைகள் புரியாமல் இருக்கும் வண்ணம் அமையும்வழி நாடவேண்டுவது அவசியமில்லையோ? அல்லது, எளியோரை வலியோர் நலியவேண்டுமென்பது இன்றியமையாத இயற்கையென்பது அவர் கருத்தோ! இன்னபடி பற்பல பேசுவார்தம் உரைகளைக்கொண்டு ஒருவழியும் உணரமாட்டாமல் திகைக்கவேண்டியிருக்கின்றது. என் செய்வது! உள்ளுற்ற விடயங்களை விளங்கிவைக்கும் கடமையை ஸ்ரீமான் இராமலிங்க ரெட்டியார் போன்ற அறிஞர்கள் மேற்கொண்டிருத்தல் வேண்டும்; அன்னவர் அக்கடமையை ஆற்றக் காண்டலோ அரிதாகியிருக்கின்றது.

மிஸ் மாக்கேல் அம்மையாரும் இன்னொரு வகையில் வாளாவிருந்துவிட்டனர். சர்வகலாசாலைக் கல்வியின் சிறப்புநலன்களை எடுத்து அவர் பலப்படப்பேசினார். “இக்கல்வி, அறிவு ஆற்றல் நீதி நடுநிலைபுத்தி ஊக்கம் தன்னலங்கருதாமை முதலியவைகளை உங்களுக்குப் பயிற்றுவித்திருக்கின்றதாதலின், வழக்குவாதம் வைத்தியம், முதலிய உயரிய தொழில்களில் அமர்ந்தாலும், பாடசாலை ஆசிரியர்களானாலும், வர்த்தகர்களானாலும், அரசியல்தொழிலில் அமைந்தாலும், உத்தியோகங்களை ஏற்றாலும், ஒழுக்கம் வழுவா உண்மையுடையவர்களாய், நீதி அன்பு வாய்மை முதலிய மேன்மைக்குணங்களைக் கைக்கொண்டு உங்களுடையகடமைகளை ஆற்றுங்கள்” என்று இவர் அறிவுறுத்தும்போது, இவையனைய வாசகங்கள் தம் புதுமையால் யாவர் உள்ளத்தையும் கவர்ந்துகொள்ள இயலாதென்பது திண்ணம். இந்த நன்[illegible]குங் கைகூடக் காணுநிருந்தும், அதற்குக் காரணங்காட்டி வேறு என்ன செய்யவேண்டுமென்று சொல்லில் அன்றோ பயனுள சொன்னதாகும். ஆங்கிலப் புலமையில் ஷேக்ஸ்பியரிற்கு அடுத்தபடிஎன்று கருதப்படும் கவிஞர் ஜான் மில்டன் என்பார், முந்நூறு வருடங்களுக்குமுன், கல்விமுறையைப்பற்றி வரைந்தவோர் கட்டுரையில், கலாசாலைகளில் கற்று முற்றியவர் எனக் கருதப்படுபவர்கள் முடிகின்ற விதங்களிற் சிலவற்றைப் பின்வருமாறு விளம்புகின்றார்—

“Some allured to the trade of law, grounding their purposes not on the prudent and heavenly contemplation of justice and equity, which was never taught them, but on the promising and pleasing thoughts of litigious terms, fat contentions, and flowing fees; others betake them to state affairs, with souls so unprincipled in virtue and true generous breeding, that flattery and court-shifts and tyrannous aphorisms appear to them the highest points of wisdom; instilling their barren hearts with a conscientious slavery; if, as I rather think, it be not feigned.

இந்தத் தீமையே இன்றைக்கு இங்கிலாந்துமுதலிய மேனாடுகளில் முந்நூறு மடங்கு அதிகமாகப் பெருகியிருக்கின்றதென்பதை இயம்பவும் வேண்டுமோ! நம் இந்தியநாடும் இவ்வகையில் மேவெறந்த நாட்டிற்கும் பின்படவில்லை. கைப்புண்ணிற்குக் கண்ணாடிவேண்டா. ஆயினும், வாழ்க்கையின் உயிர்நிலையாகிய இதனை ஒருவரும் கைகொள்ளக் காண்கிலம். பட்டங்களைப் பெற்றுக்கொண்டு அக்கட்டிடத்தினின்று வெளிவருதன்முன் ஓட்டமும் பிடியுமாய் எல்லோரும் ஒருவரையொருவர் துரத்தத் தலைப்படுவதே கருமமாகின்றது. மற்றவர்மோதி சிலர், தாமே இடறிச்சிலர், இடையே விழுவதும், அவர்களை மிதித்து மற்றவர் மேல் விரைவதும் ஆகி, வாழவேண்டிய இடங்களெல்லாம்போர்க்களங்களாய் முடிகின்றன. ஓடாதே பிடிக்காதே, என்று அறிவுறித்தி, அவ்வறிவு பற்றும்வகை மனதைத் திருந்திவைப்பாரல்லரோ மேலோர். இவ்வாறின்றி, ஓடுவதும் பிடிப்பதும் போதாதென்று முழங்குவார் ஒருசாரார். மற்றவர் ஓட்டமும்பிடிப்பும் இல்லாவிடில் உயிர்வாழ்க்கையே இல்லையென்னுமொரு பொய்க்கொள்கைக்கு ஆளாகி, அதனோடு அறத்தையும் அன்பையும் சார்த்தமுயல்பவராய் “ஓடுவதை மெல்ல ஓடு, பிடிப்பதை மெல்லப்பிடி, தள்ளுவதை மெல்லத் தள்ளு, மிதிப்பதை மெல்ல மிதி” என்று அறவுரை பகர்வார். டாக்டர் ஜான்ஸன் என்ற ஆங்கிலப்புலவர், இந்தப்பரிவுடைய அறிவினைப் பரிகசிப்பவராய், மலையிலிருந்து ஒருவனைத்தள்ளிவிட்டுப் பிறகு மெல்லவிழுந்து உருளும்படி அவனை வேண்டிக் கொள்வதை ஒக்குமென உரைத்திருப்பது நினைவிற் கொள்ளத்தக்கது. ஓட்டமும் பிடியும் எப்பொழுது வயிற்று வாழ்க்கைக்கு இன்றியமையாததாயிற்றோ, அப்பொழுதே ஈகை இரக்கம் நியாயம் முதலிய நற்குணங்களிலிருந்துமக்களினுடைய நாட்டம்பிரிந்துவிட்டது, என்பதை மிஸ் மக்கேல் அனையவர் அறிந்துகொள்ளக் கூடாதவர் அல்லர். ஆயினும், அவர் மூலகாரணத்தை முனைந்துரைக்காது தீர்கின்றனர். [illegible] அறியோம்!

[illegible library stamp]

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 4. நகர்நீங்கு படலம்.

[595-வது பக்கத் தொடர்ச்சி.]

வைத வைவிலா வள்ளல் மாக்கதை.

வான்மீக முனிவரது வரலாற்றின்படி, கானக வாழ்க்கையின் கடுமைகளையெல்லாம், இராகவன் தன்னினிய சீதைக்கு எடுத்தியம்பிய சொற்கள் முழுவதையும் இங்குப் பெயர்த்தெழுத வேண்டா. அரிமாமுதல் காட்டீக்கள் வரையுள்ள பலவாய உயிர்களால் வரவல்ல தீமைகளைக் கூறினான். கடியவேகக் காற்றும் புனலும் கடக்கரிய முள்ளுடைய நெடுவழியும் விளைக்கவல்ல வருத்தங்களை இயம்பினான். பசிதாகங்களின் துன்பங்களைப் பலபடப்பகர்ந்தனன். உடன்போக்கினின்று தன் மனைவியை விலக்குதற்கியன்ற வார்த்தைகளே இவை என்னற் கையமில்லையெனினும்,

“இரவும் பகலும் மரத்திலிருந்து விழுங் கனிகளைப் புசித்து ஐம்புலனை யடக்கி வேறொன்றை நினைக்கும் ஆசையற்றிருக்கவேண்டும்; தலைமயிரைச் சடையாக்கிக் கொண்டு மரவுரி தரித்திருக்கவேண்டும்; சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கும்வண்ணம் தெய்வங்களுக்கும் பிதிருக்களுக்கும் பூசை பண்ணவேண்டும்; தினந்தோறும் நாடிவரும் அதிதிகளை ஆராதிக்கவேண்டும்; நாடோறும் மூன்றுவேளை ஸ்நானஞ் செய்யவேண்டும்; வெகு நியமத்துடன் இருக்கவேண்டும்; ஆகையால் காட்டில் துன்பம் வெகு அதிகம். தானாகவே சென்று புஷ்பங்கள் எடுத்து வந்து அவைகளால் வேதிகளில் வானப்ரஸ்தர்களுக்கு உரிய முறைப்படி பூஜை செய்யவேண்டும்; ஆகையால் சிறுபெண்ணே, காட்டில் துன்பம் வெகு அதிகம். காட்டில் வசிப்பவர் நியமத்துடன் கூடியவர்களாய்க் கிடைத்ததையுண்டு சந்தோஷப்படவேண்டும்; ஆகையால், எப்பொழுதும் காட்டில் துன்பம் வெகு அதிகம்........... காட்டில் வசிக்கும்போது ஆசை கோபம் இவைகளை முழுதும் விட்டுவிடவேண்டும்; தவத்திலேயே மனத்தைச் செலுத்தவேண்டும்; ஆகையால், எப்பொழுதும் வனவாசம் வெகுதுக்கமானது. ஆகையால் நீ வனத்துக்கு வரவேண்டா, உனக்கு வனவாசம் ஒவ்வாது. நான் நன்றாக ஆலோசித்துச் சொல்கிறேன்.

எனப் பகரும் இவையனைய வாசகங்கள், வனத்திற்கு வாராமல் வைதேகியை விலக்குதற்கோ, மற்று, அவைகளை ஓதும் எம்மனோர் என்னிதுவென மலைவுற்று நிற்பதற்கோ நினைத்தனவென்பது தெரிந்ததில்லை. “நாடோறும் மும்முறை நீராடி, விருந்தினரைவழிபட்டு, ஆசை கோபங்களை விட்டிருக்க வேண்டுமாதலால், வனவாசம் மிக்க துன்பமுடைத்து; அது உனக்கு ஒவ்வாது” என்று சொல்வதும் இராமன் சொல்லப்படுபவனும் சீதை என்னின், இன்னதன்மையர் அரசுவைகும் தகுதியின்மை நோக்கியேயோ அவ்வுத்தமி கைகேசி காட்டிற் கோட்டினாள் என எண்ணினும் ஏதங் காண்கிலம். மற்று, “நீ, பரதன்முன் என்னை ஒருபொழுதும் புகழ்ந்து பேசாதே. புத்தியுடனிருக்கும் புருஷர்கள் பிறருடைய துதியைப் பொறார்கள் அன்றோ! ஆகையால் பரதன்முன் என் குணங்களை நீ எடுத்துரைக்கவேண்டாம். நீ பரதனால் விசேஷமாக எண்ணிப் போற்றத்தக்கவளல்லள்”, என்று பொதுவறின்ற பெரியோன் பரதனைப் பொதுமாறுடைச் சூழ்ச்சியால் மதித்துப்பேசிய இராமனும், மறுக்காமல் அதனைக் கேட்டிருந்த சீதையும் அப்பாவங் தீருமாறு நெடுந்தவம் செய்யவேண்டுமென்னுந் தகுதியுணர்ந்து தாமே வனம் நண்ணினரெனினும் சாலப் பொருத்தமுடையதாகும். இவ்வண்ணம் இராமன் சிறியன சிந்தித்தானென்று செப்பலுஞ் செவ்விதாமோ. பிற்றைநாள் இவன் வாலியைக்கொன்றது நீதியோ என வழக்குரைப்பார்பலர் தள்ளரும் பெரும் புகழ்த்தம்பி பரதன்மேன்மையை இவ்வாறு கொன்று இல்லாளொடுமினிதிருந்து கூட்டுண்ட கொள்கையை யாதென்றியம்பித் தேறலென் றறிதலருமை. “வாய்மையும் மரபுங்காத்து மன்னுயிர் துறந்தவள்ளல் தூயவன் மைந்தனே, நீ பரதன்முன் தோன்றினாயே” என வாலி வருந்தியுரைத்த சொற்கள், வான்மீகமுனிவர் தம் இவ்வாக்கியங்களின்படி சாலப்பொருந்தும். இஃதொன்றேயெனின் ஒருவாறு பொறுக்கலாம். இலக்குமணனை விலக்க முயன்றபோதும், “அரசராகிய நமது தந்தை இப்பொழுது மன்மதன் வலையில் சிக்கியிருக்கின்றார். கைகேசியும் இத்தேசத்தை யடைந்தபின்னர், வருத்தமடைந்திருக்குந் தன் சக்களத்திகளுக்கு நன்மையை நடத்தமாட்டார். கைகேசியின் வசத்தில் நிற்கும் பரதனும் இராச்சியத்தை யடைந்தபிறகு, மிகவுந் துக்கத்தை யடைந்திருக்கிற கௌசலையையும் சுமித்திரையையும் நினைக்கவும்மாட்டான்” என ஓரேபடித்தாய் இராமன் பரதனைப் பழிக்கடலில் அழுத்துவானெனின், அவன் அரசனாகாதது அயோத்திமாநகரின் நன்மைக்கே என அறைதல் வேண்டும். மாறுடை இயற்கையின் தாழ்ந்த நொய்ம்மையைப் பரதனுடன் சார்த்திப் பேசிய இவ்வாசகத்தால் இராமன்பிறந்த சூரியன்மரபிற் கோர் மறுவுண்டாக்கினான். தன்னைக் கொன்றதற்கு எவ்வாற்றாலுங் காரணங்காணவொண்ணா வாலி, “ஆவியைச் சனகன்பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்தபின்னர்த் திகைத்தனைபோலுஞ் செய் கை” என ஒருவண்ணம் அமைதி தேடியதேபோன்று இங்கு,நிலமகளைப் பிரிகின்றபரிவினால் சிந்தைதிகைத்துச் சொற்சோர் வெய்தினன் என்பதல்லால் இராமனைப் பொறுக்கும்வகை வேறொன்று வேண்டினுங் காண்டலரிது. பரதனை நோக்கிய அளவில், “எம்பெருமான் பின்பிறந்தோர் இழைப்பரோ பிழைப்பு” எனத் துணிந்துகொண்ட அவ்வேட்டுவப் பெருமகன்குகன், இவ்விராமன் இங்கியம்பிய இப்பழிபடு சொற்களைக் கேட்டிருப்பானாயின், “பெரும்பரதன் முன்பிறந்தோன் இழைத்தனனே பிழைப்பு” என்று மதிமாழ்கி அயர்ந்தவனாய்த் தீர்ந்திருப்பான்.

வான்மீகத்தின்படி இராமனது சிந்தையுஞ் சொல்லும் இவ்வாறாக, அன்னான் அரும்பெறல் தேவியின் மறுமொழி என்னவாறு அமைகின்றதென்பதை, சிறிது நோக்குவோம். காடுறை வாழ்க்கையின் இன்னல்களைத் தான் தளராமல் தாங்கவல்லள் என்பதை வற்புறுத்தினாள்; அது தக்கதே. கொழுநனைப் பிரிந்திருத்தல் குலமாதற் கொவ்வாதாதலின் தான் உடன்போதல் இன்றியமையாததொன்றெனச் சாற்றினாள்; இது நேரிதே. இராமனருகிருக்க எத்துயருந் தனக்கு இன்பமாய்த் தோன்றுமென்று கூறினாள்; இதனில் சிறப்பொழிய இழிவில்லை. தான் பிறந்தகத் திருந்த

போது ஜோதிடர்களும் ஓர் பிச்சைக் காரியும், "இவள் காட்டிற் சிறிதுகாலம் வசிக்கவேண்டி வரும்" என உரைத்துவைத்ததைப் பன்முறை கூறிக்கூறி அந்த நிகழ்ச்சி பொய்க்காதெனப் புகன்றனள்; அதுவும் நியாயமே. ஆனல் இவைகளைக்கேட்டும் தன்னை உடன் கொண்டேக இணங்காதிருந்த நாயகனைநோக்கி அச் சனகன் மாமகள்,

"இராமரே, விதேக வம்சத்திற் பிறந்தவராயும் மிதிலையின் மன்னவரராயும் இருக்கும் எனது தந்தையார், மருமகரான தங்களை எண்ணிப் பெண்ணின் தன்மையும் புருஷவேஷமு முடையவராக நிச்சயிக்க மாட்டாரா? தபிக்குஞ் சூரியனிடத்திற்போல் இராமரிடத்தில் தேஜஸ் இருக்கின்றது, என்று உலகம் அறியாமையால் பொய் சொல்கின்றது; அவ்வாறு கண்கூடாக அறியப்படாமையால் இராமரிடத்தில் அது இல்லவேயில்லை"

என நாண்துறந்து நவின்றதற்கு இனப்பழி நோக்கிக் குலமடந்தையர் வெள்காரோ உளம். காரியம் ஆதல் வேண்டி யாதுங் கழறலாமென்பது மெல்லியல் நன்மொழி மடவார் வாய்க்கிசைந்த கட்டுரை யாதலரிது. இதனேடு நின்றுற்றுன் போதுமே. பின்னரு மவள்,

"குமரியாயும் பார்வையாயும் வெகுகாலமாக உடனுறைபவளாயும், பதிவிரதையாயும் இருக்கும் என்னை, மனைவியைப் பிறருக்குக் கொடுத்துச் சீவிப்பவர்போல், மற்றவர்க்குக் கொடுக்க விரும்புகின்றீர்களே"

என்ற இவ்விழுக்குடைபவாசகத்தை, ஜனகன்மாமகளல்லாது வீதிவாய்த் திரிதரும் வசவியர்களும் நெஞ்சால் நினைத்திபம்ப அஞ்சுவார்—சீதையோ கூசா நாவால் இது கூறினுள். கூறி,

"என்னைத் தாங்கள் அழைத்துக்கொண்டு போகாவிடில், இன்றைத்தினமே நான் விஷத்தைக் குடித்துவிடுவேன். பகைவரின்கீழ் ஒரு போதும் நான் சீவித்திருக்கமாட்டேன்"

என்றவள் முடிக்குங்கால், "பரதனைப் பகைவன் என்று பகருமுன் மகளே, முதலுரைத்த விஷத்தை நீ பருகுவாய்" என இராமன் இயம்பாததற்குக் காரணம் அவனும் பரதனைப் பகைவனேஎனப் பாராட்டியதேயன்றி வேறன்று. கலையின்களஞ்சியமாகிய கம்பர்காவியத்தில், கேள்வியளவிலேயே வானரவாலியும், கண்டமாத்திரத்தில் வேட்டுவகுகனும் பரதனது பெருமையைப் பெரிதுணர்ந்து பேசினர். வான்மீகர் நூலிலோ உடன்பிறந்த ஒருவன் தானுந் தன் மனைவியுமாய்ச் சேர்ந்து கண்ணிரண்டும் ஒன்றையே நோக்குகின்ற உவமைக்கிணங்கி, பெருந்தகைப் பரதன்றன் தூய்மையைத் துவைத்துண்ண நேர்ந்தகுறை என் செய்யினும் தீர்ந்திடாது. இதனேடு, "பாரடீ என்னழகை" என்றென்று கைகேசி கோசலையின்முன் தருக்கிப் பண்டைநாள் புரிந்திருந்த தாழ்மையும், வன்மமுடைய கோசலை, இராமன் அரசெய்தியபின் இப்பழியை முடித்துக் கொள்ளக் காத்திருந்ததும், வாயிலவந்தவாறு தயரதனைக் கோசலை பழித்துக்கூறுவதும், வனத்திற் கேகநின்ற தன் மருகியை நோக்கி இவள்,

"முதலில் சுகம் அநுபவிப்பதும், அற்பமான கஷ்டம் நேரிடினும் கணவனை நிந்திப்பதும், அவனைக் கைவிடுவதும் ஸ்திரீகளின் இயற்கை......குலத்துக்குத்தக்க ஆசாரத்தையுடையவர்களும் மரியாதையை யுடையவர்களுமான பதிவிரதைகளுக்கு, பரிசுத்தி செய்பவனுன கணவனெருவனே விசேஷமானவன். ஆகையால் காட்டுக்குப் போகின் - ன் குமாரனுன இராமனை நீ அலட்சியம் பண்ணுதே. கணவன் செல்வம் படைத்தவனுக இருந்தாலும் பணமற்றவனுக இருந்தாலும், அவன்தான் உனக்குத் தெய்வம்"

எனச் சிறுமாநுடத் தன்மையே அளவுகோலாகக் கொண்ட கொள்கையால் அறிவுறுத்துவதும், பிற்றைநாள் மாயமானைத் தொடர்ந்து சென்ற இராமனைத் தொடர்ந்துசெல்லாது வருவதஞ்சிக் காத்துநின்ற இலக்குமணனைச் சீதை,

"கெட்டவரே, கருணையற்றவரே, கொடியவரே, குடிகேடரே.........நீர் தனியே இராமருக்குத் துணையாக வருவதுபோல் எனக்காகவே காட்டுக்கு வந்திருக்கின்றீர். அல்லது இவ்வாறு செய்யப் பரதர் உம்மை இரகசியமாக ஏவி இருக்கலாம்.........நீர் அவருக்குச் சகோதர உருவமாகிய சத்துருபோலும். என் நிமித்தம் நீர் இராகவர் காட்டில் மாண்டுபோகட்டும் என்றிருக்கிறீரோ. என்மேல் வைத்த ஆசையால்தான் நீர் இராகவரைத் தேடிச்செல்லவில்லை"

என்று ஈரமற்றநாவால் ஏசுவதும், அனைய நயமிலா வசைமொழிகள் வான்மீகிஇராமாயணத்தில் பல்கியிருத்தலால்,

நொய்தி னொய்யசொ னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்தொளை
யெய்த வெய்தவற் கெய்திப மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே

என்று கம்பர்பாடிய அவையடக்கச் செய்யுளிற்கு வழங்கிவரும் பலபொருள்களில், ஏழுமராமரங்களும் தொளையெய்தும்படி ஒரு அம்பெய்த இராமனுக்கு ஏற்ற சிறந்த கதைசெய்த முனிவனதுவாக்குநிலைநின்ற இத்தேயத்தில், ஒருவரையொருவர் வைதுகொண்ட வசைமொழிகள் ஒன்றும் இல்லாமல் யான் மெல்லிய சொற்களால் அக்கதையை இயற்றினேனே-என் செய்வேன்—அந்த வன்சொற்களில் பழகியுள இத்தேயத்தினர் இம் மென்மொழியை ஏற்பாரோ!" என்னும் பொருளும் ஏற்புடையதாகுமென நினைக்க நேர்கின்றது. மீண்டும்,

வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மிதி யம்புவ திபாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி ஞேர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சிதெ ரிக்கவே

என்றவிது வஞ்சப்புகழ்ச்சியல்லாதவிடத்தும், தெய்வமாக்கவி எவ்வாறு இருத்தல் வேண்டுமென எடுத்துக் காட்டற்கியன்றது தன்நூல் எனக் கம்பரியம்பினுரெனினும் அது தகவிலாத் தற்புகழ்ச்சி யாகாது. கம்பநாட்டாழ்வார் கவி தராதரத்திலுள்ள தமிழ்க் குற்றமெல்லாம் அராவும் அரமாயிற்றென்ற கட்டுரை, இனிமையைக் கெடுக்கின்றகுற்றங்களை நீக்கிற்றென்ற பொருளோடும் பொருந்தி நிகழ்தல் கூடும்.

இனி, வடநூன் முனிவரின் வழிவிட்டு, செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளின் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞராம்கம்பரைக்கடைபிடிப்போம். அங்கு வந்து இனிமையை அலமரச்செய்த வசைமொழியனைத்தையும் இவர் அராவிவிட்டனர். வெளிப்பட்ட வசைகளன்றிக் குறிப்பினுல் உள்ளூற்ற குறைகள்போல் கருதவல்லவைகளும் கம்பரது நூலிற்கு வழிவிலகிப் போயின. நெடுமுடி புனைதலின்றித் தமியனுய் எய்திய இராமனைக்கண்டு துணுக்கமெய்தி, "நின் முடியெங்கே, குடையெங்கே, மாகதர்கள் எங்கே, நின்குஞ்சி

யேன் மஞ்சனப் புனிதநீரால் நனைந்திலது, நின் பட்டத்துயானை யெங்கே, புஷ்பரதம் எங்கே" என்று இராமனது இன்மையைக் கணக்கெடுத்து வான்மீகரது நூலினுட்போல் கம்பராமாயணத்தினுள் சானகி புலம்பினு ளலள். நாயகன் வந்தனன் என்ற நினைவல்லால் அவன் செல்வத்தினது அடையாளங்களின் உடைமையும் இன்மையும் பெருங்குலமகளிர்க்குத் தோன்றமாட்டாவாதலால் கம்பர் அவைகளை அகற்றிவிட்டார். அப்படி அவள் புலம்பியதினுலோ நாயகனைக்காட்டிலும் அவன்செல்வத்தில் மோகம் பெரிதுடையாள் தன்மருகி என ஐயுற்றுக் "கஷ்டம் வந்தபோது நாயகனைக்கைவிடாதே; உயர்விலுந்தாழ்விலும் அவனை ஒன்றுகக்கொள்" எனக் கோசலை வடநூலில்வற்புறுத்தலாயினுள். ஆயினும் என்? மற்றவரைத் தெருட்டுவாரனைவரும் தாமே தெருள்வாராயின் உலகம் இன்று வேறு விதமிருக்குமே. கைகேசியின் கொடுமையால் நலியுற்று வீழ்ந்துகிடந்த தயரதனை அந்தக் கோசலைதான் திரும்பியும் பார்த்திலள். அவனே தேடிவந்து இவள்பால் தேறுதலை நாடியபோது, இராமனுக்கின்றி அரசினைப் பரதனுக்குக்கொடுத்தகொடுமையையே கூறிக்கூறி இடித்துரைத்தாள். எனினும், இயம்பும் நெறிக்கிணங்க மாந்தர் தாமே செய்திடார், என்னுமுண்மையைவிளக்க வான்மீகிமுனிவர் அவ்வாறு அமைத்தனர் என்று எண்ணினுல் கலையின் உணர்வெல்லாம் மலைந்துநிற்கும்.

கோமுடி கொண்டதோ தன் நாயகன் தலை என்று காணுங் கண்கள் கற்புடைய மங்கையர்க்கில்லை. அவ்வாறே இருந்தமுடி கழிந்ததும் அவர்கண்களுக்குத் தோன்றுது. அரசிழந்த கொழுநனே டடவிநண்ணி, அவனையும் பிரிந்து அழுதிருந்த தமயந்தி,

முன்னை வினையின் வலியால் முடிமன்னன்
என்னைப் பிரிய இருங்கானில்—அன்னவனைக்
காணு தழுகின்றேன்......

என்ன வணிகர்தலைவனுக்குச் செப்பிய செம்மையைப் புகழேந்திப்புலவர் இனிது காட்டுகின்றுர். அரசிழந்திருந்தும் நளனை அவள் அப்போது, 'முடிமன்னன்' என்றது மோனையின் பொருட்டன்று. அவன் செல்வத்தில்·மாறுபட்டநிலை அவள்·கருத்திற் பதியாமையே காரணம். ஆதலின், மனையாள் மாட்சியைக் கம்பர் ஒரு முகத்தால் உரைத்தால், அவருக்கிணையாய கலையுணர்வுடைய புகழேந்திப்புலவர் அதனையே மறுமுகத்தால் உரைக்குமிது காவியச்சுவை பயில்வார்தமக்கு நல் விருந்தாகும்.

ஆதலின் சீதை தனதன்பனுக் கரசில்லையோ என் பதனையும் நினையாளாய், அவனருகிருந்த அரசரந்தணர் முதலியோர் பொருமி நிற்றலையும், மாமியர் தன்னைத் தழுவி அழுதலையும் நோக்கி, வழிந்தநீர் நெடுங் கண்ணினளாய் வள்ளலை நோக்கி

பொன்னை யுற்ற பொலங்கழ லோய்புகழ்
மன்னை யுற்றதுண் டோமற்றிவ் வன்றுய
ரென்னை யுற்ற தியம்பென் றியம்பினுள்
மின்னை யுற்ற நடுக்கத்து மேனியாள்

[மின்னலைப்போல் நடுக்குகின்ற அவள், பொன்னுலாகிய வீரக்கழல் அணிவந்தவனே, புகழையுடைய சக்ரவர்த்திக்கு ஏதேனும் நேரிட்டதுண்டோ—அல்லது இந்தக் கடுந்துயரிற்கு வேறு காரணம் நேரிட்டதுண்டோ சொல், என்று கேட்டாள்]

ஓளையுடுத்திக் காடுசேரநின்ற இராமனை இப்பொழுதவன் 'பொலங்கழலோய்' என அழைத்தது தமயந்தி 'முடிமன்னன்' என்று தன் நாயகனைக் குறித்ததை நிகர்க்கும். அசையாச்சிந்தை இராகவன் அமைதியும் அன்பும் விளங்க,

பொருவி லெம்பி புவிபுரப் பான்புக
ழிருவ ராணையு மேந்தினெ னின்றுபோய்க்
கருவி மாமழைக் கற்றடங் கண்டுநான்
வருவெ னீண்டு வருந்தலை நீயென்றுன்

[நிகரற்ற என் தம்பி பூமியைக் காப்பான். எனக்குத் தஞ்சமாகிய இருவர் ஆணையும் ஏற்று நான் இன்று போய், கூட்டமாகிய மேகங்கள் படிந்த மலைகளையுடைய வனத்தைக் கண்டு இங்கே வருவேன், நீ வருத்தப்படாதே, என்றுகூறினுன்.]

தன் தம்பியர் மூவருள் புவிபுரப்பவன் யாவனே, பெயர் இயம்பினுனலன். ஆயினும் 'பொருவில்' என்ற சிறப்படை மொழியால் பரதன் என்றே சீதை உணர்வாள் என்பது நிச்சயம். பரதனைப்பற்றிப் பொதுவுற வான்மீகர்வாய்வழி பேசிய தன்னையே மறுப்பான் போல் இங்குப் 'பொருவில்' எனப் புகல்கின்றுன். ஆணையிட்டவர்களில் ஒருவர் தயரதன்; இராமனைப் பயந்தது கைகேசியே என்ற நினைவு எங்குங் குடிகொண்டிருந்ததால் அதுவும் உரையாமலே உணரப்படும். மற்று, "கற்றடங்கண்டுநான் வருவென்" என்றதுதான், இன்றுபோய் நாளைவருவான்போல் ஒலிக்கின்றது. ஆண்டு ஓர் பதினுன்கென்றறையாது மறைத்தனன். அவ்வெல்லையைச்சீதை உரையாது ஊகிக்குமாறில்லை. ஒருநாட்பிரியினும் நூறுண்டு பிரியினும், துயரின்கடுமை அவளுக்கு ஒன்றேயா மாதலின், காலவரையவட் கொருபொருளிலது. ஆதலின்; யாராள்வது என்றேனும், யாரிட்ட ஆணை என்றேனும், ஏனிது நிகழ்ந்ததென்றேனும், இராமன் மீள்வது என்று, என்றேனும் நினைத்தவளுமல்லள், வினவினவளு மல்லள். அவளுக்கிப்பொழுது உற்றதுயர் ஒன்றே.

நாய கன்வன் நண்ணலுற் றுனென்று
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவென் யானென்ற
தீய வெஞ்சொற் செவிசுடத் தேம்புவாள்.

[நாயகன் காட்டை அடைகின்று னென்றேனும் பெற்ற இராச்சியத்தை இழந்தா னென்றேனும் அவள் வருந்தவில்லை. "நீவருந்தாதே நான் போகின்றேன்" என்று சொன்ன மிகக்கொடிய சொல் தன் செவியைச்சுட அழுது வருந்துவாளாயினுள்]

தன்னையுந் துறந்தேகத் துணிந்தனனே! தான்வைத்த காதலெலாம் ஒருதலையே யாயிற்றே! இதுகேட்டும் தானெவ்வுவாளென அவன்நினைத்த தாழ்மையே தனக்கு வாய்த்ததோ என்ன மலங்கினுள்.

அன்ன தன்மைய ளையனு மன்னையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை யென்னை யிருத்தியென் றுயெனு
உன்ன வுன்ன வுயிருமி ழாநின்றுள்

"மற்றெல்லா மாகுக, என்னை இரு என்றுசொன்னதென்" என உணங்குவாளை நோக்கி, வனவிலங்குகளாலும் பசிதாகங்களாலும், தவநோன்புகளாலும் பயமுறுத்தினுனலன். தானிருக்கவெம்புலியுமரிமாவும் என் செய்யும்! பசிதாகங்களைப் பாராள், நோன்புகள் உவந்து செய்வாள். ஆதலின் இவைகளைக் கூறுவது பயனற்றதாவதுடன் இழுக்குமுடையதாகும். மனத்தால் ஆற்றவல்லன அனைத்தையும் ஆற்றுவாளாதலால் உடலால் பொறுக்கமாட்டாமையே கூறி அவளை

விலக்கக் கருதினன். 'வனத்தில் வழிநடக்கமாட்டாது உருகிப்பதைத்த உயிர் நிலைக்காதாதலின் இங்ஙனே இருத்தி என்றியம்பினேன்' என்னுங் கருத்தோடு

வல்ல ரக்கரின் மால்வரை போய்விழுந்
தல்ல ரக்கி னுருக்கழல் காட்டயற்
கல்ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றான்

[உன் குளிர்ந்த செம்பஞ்சூட்டிய தாமரைமலர் போன்ற பாதங்கள், வலிய அரக்கர்போன்ற பெரிய மலையில்போய் விழுந்து, இரவிலும் அரக்கை உருக்கியதுபோன்ற வெப்ப முடைய இடங்களில் கற்கள் தைப்பதற்குரிய வலிமை உடையன அல்ல—என்றான்]

'சுட்டுத் தீயவோ நீ என்னுடன் வருவது' என விலக்கமுயன்ற நாயகனுக்கெதிர் அச்சீதை, "விட்டுச் சென்றால் தீயேனோ" என மறுத்து,

பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனு
மெரியு மென்பது யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள்.

[என்பால் இரக்கமற்ற மனத்தோடு ஆசையுமின்றி என்னை விட்டுப்பிரியவே விழைகின்றாயல்லது வேறில்லை. ஊழிக்கால சூரியன் மிகச்சுடும் என்பதெல்லாம் எங்கே. உன்னோடிருப்பேனாயின் அதுவே என்னைச்சுடாது. எனின் இந்தப்பெருங்காடு, உன்பிரிவைக் காட்டிலும் என்னை அதிகமாய்ச் சுடவல்லதோ—என்றாள்]

இனி என்செய்வான் இராகவன். கைவந்ததென் றெண்ணிய அவ்வோர் காரணமுங் கழன்றுவிட்டது. வேறு யாது கூறலாமென்றவன் சிந்திக்குமளவில் சீதையோ தன் மனையெய்திச் சீரையணிந்துவந்து அவன் கரங்களைப் பற்றி நின்றனள். இறுதியாய சூழ்ச்சியொன்றேயுளது. "நீ வருவதால் எனக்கு இடர் பெரிதுளது; அவ்விடர் செய்வது உனக் கழகோ" வெனச் சொன்னால் அவ்வேழை இதனை மறுக்கும்வகை காணாது ஊரகத்தே இருக்க இணங்குவாளென மதித்து,

முல்லை யுங்கடன் முத்து மெதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்விளை வுன்னுவா
யல்லை போத வமைந்தனை யாதலி
னெல்லை யற்ற விடர்தரு வாயென்றான்

[முல்லைமலரும் கடல்முத்தும் எதிர்த்தாலும் அவைகளை அழகினால் வெல்லும் வெண்மையான பற்களையுடையவளே நேரிடக்கூடியதை நீ நினைக்காமல் என்னுடன் வரநிற்கின்றாய்; ஆதலின் எனக்கு எல்லையற்ற துன்பத்தை உண்டாக்குவாய்—என்றான்]

இராமன் சொல்வழுக்குற்று நின்றவிடம் இதுவொன்றே. தனக் கிடர் செய்வாள் சீதையென்றியம்பியும் பிழைக்கலாமோ. ஆதலின்,

கொற்ற வன்னது கூறலுங் கோகிலஞ்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
யெற்று றந்தபி னின்பங்கொ லாமென்றாள்

[இராமன் அது சொன்னவுடனே, குயிலைவென்ற குதலைச்சொற்களையுடைய சீதை கோபித்து, 'உனக்கு நேர்ந்துள்ள துன்பம் என்னோடிருப்பது என்பது ஒன்றுமட்டுமேயோ! என்னைத்துறந்து சென்றபின் உனக்கு எல்லாம் இன்பந்தான்போலும்—என்றாள்]

இராமன், செல்லுஞ்சொல் வல்லனுயதெல்லாம் இவ்வில்லாள்முன் இயன்றதில்லை. இதற்குப் பதிற்சொல்ல அவன் புத்தியத்தனையும் போதாதாகிப் பிறிதோர் மாற்றம் அப்பெருந்தகை பேசலன்; சானகியுந் தன்கருத்தைச் சாதித்தாள். பரதன் புகழைப் பழுதறவிட்டு வரதனுந் தம்பியும் வனிதையர் திலகமும் ஊனமில் தூய்மை உடன்வரக் கானகம் கருதி வழிக்கொண் டாரே.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[585-வது பக்கத் தொடர்ச்சி]

உரு:—சரி—கிழவிக்காக எத்தனை திட்டம் போட்டிருக்கிறாய்?

துரை:—ஒரு மண்டலம் மூலிகைச்சாறுப் பத்தியம்.

உரு:— நாற்பத்தெட்டு நாட்களா? எழுநாள் போதாதோ—

துரை:—அவசரப் படக்கூடாது! மனோவசிய சக்தி அறவே என்னைவிட்டு நீங்கிவிடவில்லை—கொடுத்த பொம்மைதான் பொருத்தமாயில்லை...கை கால் தலைகளை ஆட்டும் ஒரு பொம்மை இருப்பின், அவள் மனதைக் கவர்ந்துவிடுவேன்.

காமா:—நான்தான் முழுதும் உங்களையே நம்பியிருக்கிறேனே!

உரு:—நான் வாங்கிக் கொணர்ந்துள்ள பொம்மையையும் கைப்பற்றவா இந்த யோசனை?

துரை:—நான் விரும்புவதுபோன்ற ஒன்று உன்னிடமிருக்கின்றதா?

காமா:—ஓகோ, குஞ்சுவைப்பற்றி யோசனையா? அந்த ரப்பர் பொம்மையும் பலிக்கவில்லை!

உரு:—நான் இதைத் தரமாட்டேன்! பிறந்த குழந்தைபோ லிருக்கிறது.

துரை:—பிறந்தகுழந்தை போலிருந்தால், நிச்சயம் நம்பிவிடுவாள் கொண்டுவா, அதை!

காமா:—உனக்கு நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்கிறேன்-மருந்துயுத்தம் நடந்ததில் நான் உன்பக்கம் பரிந்து பேசியதற்கு நன்றியோ இது. பொம்மையை எடுத்துவா—பார்க்கலாம்!

துரை:—யோசித்தேன்...ஒரே வழிதானுண்டு...

உரு:—கமிட்டி யோசனையில் எந்த முடிச்சு அவிழ்க்கச் சூழ்ந்தீர்கள். பெண்ணை அங்குமிங்கும் நகரவிடாமல் அறையில் சிறை அடைத்தால்...

துரை:—முடியாமலா? இப்பொழுதே பாதி குணமாய் விட்டது...

குஞ்சு:—அம்மாவை அங்கும் காணவில்லை,

காமா:—ஏண்டி-புத்தக அறைக்குள் நுழைந்தாய்!

குஞ்சு:—அம்மாவைத் தேடினேன்!

உரு:—புத்தகங்களுக்குள்ளா? — பைத்தியத்தைப் பாருங்கள்! நீங்கள் என்ன யோசனை கூறுகிறீர்கள்?

குஞ்சு:—யோசனை என்ன!

உரு:—என்னசொன்னாய்?—காமிட்டியா-

காமா:—போடி—நீ—குழந்தை. காமாட்சி என்று என்னை அழைத்தாளே...

உரு:—பாட்டியை, பெரியவரை, பேர்சொல்லி அவமரியாதையாக அழைக்கிறாயா—!—அறைகொடுத்தாலல்லாது திருந்தாய் நீ—

குஞ்சு:—உனது பேரைச்சொல்லி அழைக்கக்கூடாதென்றே காமாட்டி என்றேன்...

உரு:—என்ன சொன்னாய் (தூணின்மேல் சாய்ந்திருக்கும் குஞ்சுவின் தலையைத் தூணில் மோதி (மூன்றுதரம் இடிக்கிறான்)

துரை:—என்ன சத்தம்? (விழித்துப் பார்க்க)

காமா:—வேணும்—வசைவாய்க்கு!

உரு:— போடட்டுமா இன்னும் பூசை?

குஞ்சு:—பந்துவிளையாடு என் தலையை...

காமா:—என்ன விஷமம்! என்ன பேச்சு! - வாயை அடக்க ஏதேனும்.......

துரை:—யோசிப்போம்!

குஞ்சு:—கொண்டா அதை, அம்மாவைத் தேடுகிறேன்...எங்கே போட்டாய் அந்தப் புத்தகத்தை!

தியா:—பகலிலும் இருள்சூழ்ந்த மனத்தோர் நாட்டில் இருக்கின்றனர். அவர்கட்குச் சுடர்கொளுத்தவே!

உரு:—கொளுத்து துணிகளை! இவன் மயிரை! கூப்பிடு அவளை.

தியா:—துணிகள் எரிந்துகொண்டிருக்கின்றன—

துரை:—ஆம், உடம்பின் சூட்டாலா?

காமா:—கண்ணாடிகளை, சீசாக்களை விளக்குச் சிம்னிகளை!

தியா:—கண்ணாடி யென்றால் காந்திக்கு வெறுப்புக் கொடுக்கும்—ஏன் குஞ்சுவுக்கும் வெறுப்பு! உடைக்க எடுக்கிறாள்போலும்.

உரு:—கண்ணாடிகளை வெறுப்பதால்தான் உன்முகக்கட்டை இப்படி இருக்கிறது! என்னைப்பார்—மூக்குக்கண்ணாடியால் முகத்துக்கே ஒரு களை.

காமா:—ஆம்! இல்லாவிட்டால் உன் அழகும் வெளுப்பும் வருமா பிறர்க்கு?

தியா:—உனக்குக் கண்ணாடிக்கண். நீ மெச்சத்தான் மெச்சுவாய்!

காமா:—நான் என்ன...அவள்மேல்எனக்குக்குறைகூற ஆசையா? மெத்தைமேல் எலி தொளைக்கிறது - காற் சேற்றுடன் சாம்பலுடன்! மனம் பொறுக்குமா!

தியா:—காலையுங் கையையுங் கழுவுவோரில்லாவிட்டால், தாயில்லா விட்டால், தந்தை கவனிக்காவிட்டால், பாட்டி சோம்பிக்கொண்டிருந்தால், சேற்றை, சாம்பலைப்போக்கும் வழி அதுவே—அவளைப் பிடித்திழுத்துக் கீழேதள்ளித் தொலைப்பதா நீங்கள்?

உரு:—உங்களை வைகிறான் பாருங்கள்!

தியா:—வா, முன் நாணி நடுங்கினாய், இப்போது ஓப்பினாயோ! குஞ்சு! ஓடிவா, சண்டை!

காமா:—உருமபிள்ளை! வேண்டாம்! பொறு!

உரு:—உங்களிருவருக்காகப் பின்வாங்கினேன்.

தியா:—(சிரித்து) இருவரா? ஒருத்தி அம்மாள், மற்றது நானேயோ?

உரு:—சாமியாருக்காக-உனக்குப் பயப்படுகிறேனா நான்.

தியா:—சரி நான்தான் முதுகிட் டோடுகிறேன்—! (வலப்புறத்தில் போய்க்கொண்டு) ராஜீயா வரமாட்டாள், நானேதான் போகவேண்டும்...

காமா:—தொலை!—இவன் வந்தான், அந்தத் துலுக்கக் கடன்காரியும் பங்களாவில் நுழைகிறாள்....

உரு:—துலுக்கனை ஏன் ஏசுகிறாய்;

[மாயாண்டியைப் பார்த்து]

ஏனடா? இத்தனை தாமதம்!

மாயா:—ரயில் போச்சு அங்கே—பார்த்துக்கொண்டிருந்துவிட்டேன் - இந்தாங்கள்—பத்து ரூபாய்.

உரு:—நோட்டா? சரி—ஏன் தாமதம் செய்தாய்-பன்னிரண்டு ரூபாய்க்குக் குறைந்து தரமுடியாது;

மாயா:—என்ன சாமி! இதற்கு அபராதமா? என்ன தாமதம் செய்துவிட்டேன்—இந்தாங்க ஒரு ரூபாய் இன்னும்!

காமா:—பாவம், ஏழை! வாங்கிக்கொள்; போதும் ஒரு ரூபாய்!

உரு:—நான் எனக்காகவாகேட்கிறேன், சாமியாருக்காக—மாயாண்டி, என்மேல் கோபியாதே—தாமதம் என்றால் சாமியாருக்குக் கோபம். சாமியாரேஇந்தாங்கள், உங்கள் மடச்செலவுக்கு.

துரை:—(வாங்கிக்கொண்டு) மிகவும் மகிழ்ந்தோம்; அப்படியே செய்வோம்! இந்தா விபூதி, மாயாண்டி!

மாயா:—பை முழுதையும் கொடுத்தால்...

துரை.—சரி—இந்தா!

மாயா:—(வாங்கிக்கொண்டு) இதோ—பணிந்தேன்.

உரு:—போதும் ஐந்து—போ—விபூதியைப் பூசிக்கொண்டு சாமியார்வேஷம் போட்டுக்கொள்.

துரை:—(கோவத்துடன்) உருமபிள்ளை!

உரு:—(சிரித்து) என்ன சாமியாரே!

காமா:—அந்தப் பொம்மையை நீ கொணரத் தாமதிப்பதால் உன்மேல் கோபம்.

உரு:—நானா தாமதக்காரன்? மோட்டாரோட்டி-துரிதன், சுருக்கன் என்று புகழப்படுபவன் நான்.

மாயா:—பழங்களையும் பையையும் வைத்துவிட்டு வருகிறேன்.

காமா:—குஞ்சு வந்துவிடுவாள்—சீக்கிரம்!

உரு:—என்ன சீக்கிரம்—என்னகொண்டுவரணும்? அந்தப் பொம்மையையா!—மாட்டேன்-

துரை:—பயப்படவேண்டா - கொண்டா—பொம்மையைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்—என் கருத்திற்கு ஒவ்வாதாயின் திருப்பிவிடுகிறேன்.

காமா:—பணம் கொடுத்துவிடுவோம்; தயங்காதே.

உரு:—சரி—எனக்கு மனமேயில்லை; உங்கள் பாடு

[மோட்டாருக்குச் செல்கிறான்]

துரை:—எனது கடைசி யோசனை அது...நான் நினைப்பதுபோ லில்லாவிடில், இரண்டொரு நாளில்—பொம்மை ஒன்று செய்துவருகிறேன்.

காமா:—உருமபிள்ளைக்குத் தெரியுமே—யந்திரங்கள் நுட்ப மறிந்தவன். பழுப்பிலைகளைத் தாங்கள் உயிருறச் செய்யுமுன் அவன்தான் பூச்சியைக் கட்டினுனுமே.

துரை:—ஆம்!...அவன் பொம்மையுடன் வருகின்றான்.

[கையில் ஒரு பெரும் செலுலாய்ட் பொம்மையுடன் உருமபிள்ளை வருகிறான்.]

உரு:—இதோ—தலையைக்கூடத் திருப்பலாம்,வலம் இடம் எல்லாப்பக்கமும் திருப்பலாம்.

காமா:—பேஷ்! பேஷ்! கால்கள்கூட ஆடுமா ?

உரு:—(கைகளை ஆட்டி) இதோ, உம்மிருவரையும் அடிக்க வருகிறது...

துரை:—(வாங்கிக்கொண்டு) இனிப் பயமில்லை—தா இங்கே! ஏனோ தெரியவில்லை; அவளைக் கண்டவுடன் வசியம் செய்யும் முறையைப் பற்ற மறந்தேன்—அதனால்தான், அவள்மனத்தை நான் அடக்கமுடியவில்லை. இந்தத் தடவை வந்துவிடுவள்.

உரு:—அதோ, வந்து விட்டாள்.

காமா:—சற்றுப் பொறு...அதென்ன புத்தகம்—

உரு:—அம்மா, எங்கே யிருக்கிறாள், பார்-போ!

குஞ்சு:—இங்கே இருக்கிறாளே!

உரு:—கொண்டுவா அந்தப் புத்தகத்தை—

[சுபத்திரை தோன்றுகிறாள்]

சுப:—இங்குத் தா—

உரு:—என்ன புத்தகம் இது—உன் தாயின் படமிருக்கிறதா—யார் புத்தகம்?

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[586-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

வேறு

307. நூலா ராய்ந்து நுண்பொறி கண்ணா
நொடிவல்லான்
மேலா ராயு மேதைமை யாலு
மிகநல்லான்
தோலா நாவிற் சுச்சுதன் சொல்லும்
பொருளெல்லாம்
வேலார் கையாய் மெய்ம்மைய வென்றல்
மிகையாகும். 70.

வேல் ஆர் கையாய் - வேல் பொருந்திய கையை உடையாய், நுண் பொறி கண் ஆ - நுண்ணிய தனது அறிவே கண்ணாக, நூல் ஆராய்ந்து - நூல்களைக் கற்றாராய்ந்து, நொடி வல்லான் - சொல்லவல்லவனும், மேல் ஆராயும் - வருங்கால நிகழ்ச்சிகளை உற்றறியும், மேதைமையாலும் - பேரறிவாலும், மிக நல்லான் - மிகவும் சிறந்தவனும், தோலா நாவின் - (விஷயங்களையெடுத்து விவகரிப்பதில்) பின்வாங்காத நாவன்மையை உடையவனும் ஆன, சுச்சுதன் - சுச்சுதன், சொல்லும் பொருள் எல்லாம் - சொல்லும் விஷயங்களெல்லாம், மெய்ம்மைய என்றல்-உண்மைப்பொருள்களேயாம் என்று நான் கூறுதல், மிகையாகும் - அநாவசியமாகும்.

நொடி - நொடித்தல். 'பொறிகண்ணும்' 'மிகையாலும்' என்பன பொருள் இனிது பயவாப் பாடாந்தரம்.

308. தேனும் வண்டுந் தீதில பாடுஞ்
செறிதாரோய்
யானுங் கண்டேன் அச்சுவ கண்டன்
றிறமஃதே
மானங் கொண்ட மாரதர் போரே
றனையாயோர்
ஊனங் கண்டேன் ஒட்டினு மொட்டேன்
உரைசெய்கேன். 71.

தேனும் வண்டும் - வண்டினங்கள், தீதில பாடும் - (தேனையுண்டு களித்து) இன்னிசை பாடும், செறி தாரோய் - பூச்செறிந்த மாலையை அணிந்தவனே, அச்சுவகண்டன் திறம்-அச்சுவகண்டனது மேம்பாட்டை, யானும் கண்டேன் - நானும் நன்றாக அறிந்துள்ளேன். அஃதே - சுச்சுதன் சொன்ன அத்தகையதே. (ஆனால்) மானம்கொண்ட மாரதர் போர் ஏறே - பெருமை வாய்ந்த மகாரதர்களுடைய போரில் சிங்கம்போன்றவனே, ஓர் ஊனம் கண்டேன் - ஒரு குறையை நான் கண்டுள்ளேன்; (அதனால்) ஒட்டினும் ஒட்டேன் - நீ சுச்சுதன் அபிப்பிராயத்துக்கு உடம்பட்டாலும் நான் உடம்படேன்; உரைசெய்கேன் - காரணத்தைச் சொல்லுவேன், கேட்பாயாக.

309. மானக் கோதை மாசறு வேலோய்
வரவெண்ணி
நானக் கோதை நங்கை பிறந்த
நாளானே
வானக் கோளின் மாண்புணர் வார்கள்
மறுவில்லாத்
தானக் கோளிற் சாதக வோலை
தலைவைத்தார். 72.

மானம் கோதை மாசு அறு வேலோய் - பெருமை வாய்ந்த மாலையை யணிந்த குற்றமற்ற வேலை யேந்திய மன்னவ, நானம் கோதை நங்கை - வாசனைத்தைலம் பூசிய கூந்தலையுடைய நமது சுயம்பிரபை, பிறந்த நாளான் - பிறந்த நாளில், வானக் கோளின் மாண்பு உணர்வார்கள் - வானத்தில் சஞ்சரிக்கும் நவக்கிரகங்களின் தன்மையை உணரவல்லவராகிய சோதிடர்கள், மறு இல்லா தானக்கோளின்-குற்றமற்ற இடங்களைக் கொண்ட கிரகநிலைகள் குறிக்கப்பட்ட, சாதக ஓலை-அவளுடைய ஜாதக ஓலையை, வரவு எண்ணி - மேல் நிகழ்தற்குரிய நிகழ்ச்சிகளை உற்றுநோக்கி அறிந்து எழுதி, தலைவைத்தார் - முன்னமே வைத்துள்ளார்.

வரவு - எதிர்கால நிகழ்ச்சி.

310. காவிப் பட்டங் கள்விரி கானற்
கடலுடன்
மேவிப் பட்டம் பெற்றவன் காதல்
மேயானால்
ஏவிப் பட்ட மீந்தவ ரெல்லாம்
இனிதேத்துந்
தேவிப் பட்டஞ் சேர்பவ ளன்றே
திருவன்னாள். 73.

(அந்த ஜாதகத்தின்படி பார்த்தால்) திருஅன்னாள் - திருமகளை யொத்த நமது நங்கை, காதல் மேயானால் -தன்காதலைக்கொண்ட கணவனால், ஏவி - ஏவப்பட்டு, பட்டம் ஈந்தவர் எல்லாம் - அவனால் அளிக்கப்பட்ட அரசபதவியைப்பெற்ற சிற்றரசரெல்லாரும், இனிது ஏத்தும் - மகிழ்ந்து துதிக்கும், தேவிப்பட்டம் - மகாராணி என்னும் பட்டத்தை, சேர்பவள் அன்று - பெறுபவள் அல்லள்; பட்டம் காவி கள் விரி கானல் கடல்நாடன் - குளங்களில் கருங்குவளை மலர்கள் கள்ளைச்சொரியும் கானற் சோலைகளையுடைய கடல் சார்ந்த நாட்டுக்கு மன்னனாகிய அச்சுவகண்டனோ, மேவி பட்டம் பெற்றவன் - பொருந்தி அரச பதவியைப் பெற்ற மன்னனாக இருக்கின்றான். (ஆதலால் இவளுடைய ஜாதகத்தின்படி அவன் இவளுக்குக் கணவன் ஆகான்.)

பட்டம் - (1) குளம் - 2. தலையரசுப் பதவி - 3. சிற்றரசுப்பதவி. ஏவி - ஏவப்பட்டு. இவளுடைய ஜாதக ரீதியாய் இவளை மணஞ்செய்துகொள்பவன் இப்பொழுது அரசனா யாள்பவன் எவனும் ஆகான்; இளவரசுப் பட்டம் பெற்ற ஓரரசிளங் குமாரனாகவே இருத்தல் வேண்டும் என்றவாறும்.

311. நங்கோ னங்கை நன்மக னாகி
நனிவந்தான்
தங்கோ னேவத் தானிள வேந்தாய்த்
தலைநின்றான்
எங்கோ னென்றே யிவ்வுல கேத்து
மியறன்னால்
செங்கோ லின்பம் சேர்பவ னன்றே
செருவேலோன். 74.

நம்கோன் நங்கை - உன்மகளாகிய சுயம்பிரபைக்கு, நன் மகன் ஆகி நனி வந்தான் - நல்ல கணவனாக நன்றாய் அமைந்தவன், தம் கோன் ஏவ - தனது தந்தையாகிய மன்னனுடைய பணியின்படி, தான் இளவேந்தாய் தலைநின்றான் - தான் இளவரசனாக இருப்பவனாவான்; செரு வேலோன் - அத்தகைய போர் வேலையேந்திய வீரன், எம் கோன் என்று - எமது அரசன் என்று, இவ் உலகு ஏத்தும் - இவ்வுலகத்திலுள்ளவர்கள் துதிக்கும், இயல் தன்னால் - இயல்பினனாய், செங்கோல் இன்பம் சேர்பவன் அன்று - செங்கோல் செலுத்தும் அரச பதவியைப் பொருந்தியவனாக இருப்பவன் அல்லன்.

மகன் - புருஷன், கணவன். 'நோதக வுண்டோ நும் மகனார்க்கு' (சிலப். 16-19) 'நினக்கிவன் மகனாய்த் தோன்றிய தூஉம்' (மணி. 21) தலைநின்றான் - நின்றான். இன்பம் - (ஆகுபெயர்) இன்பங்களை யெல்லாம் நுகர்தற்கேற்ற அரசபதவி.

312. என்றா லன்றச் சாதக வோலை
எழுதிற்றால்
குன்றா வென்றிக் குன்றுறழ் யானைக்
கொலைவேலோய்
நன்றா நங்கைக் கொன்றிய காமப்
பருவத்தான்
நின்றா னன்றே யின்றுணை யாகு
நிலைமேயான். 75.

குன்றா வென்றி - குறையாத வெற்றி பொருந்திய, குன்று உறழ் யானை - மலையை யொத்த யானையையும், கொலை வேலோய் - உயிரை வாங்கும் வேலையும் உடைய மன்னவ, என்று - மேற் சொன்னவாறு, அன்று அ சாதக ஓலை எழுதிற்று - இவள் பிறந்த அன்று குறிக்கப்பட்ட அந்த ஜாதக வோலையில் சோதிடரால் எழுதப்பட்டிருக்கின்றது; ஆகையால், இன் துணை ஆகும் நிலைமேயான் - இவளுக்குக் காதற் கணவனாகும் நிலைமையிலிருப்பவன், நன்றா நங்கைக்கு ஒன்றிய - நன்றாக இவளுக்குப் பொருந்திய, காமப் பருவத்தான் நின்றான் - காம நுகர்ச்சிக்குரிய யௌவன பருவத்தனாய் இருப்பவனே ஆவான். அன்றே - அல்லவா ?

'ஆல்' இரண்டும் அசை

313. ஆழிக் கோமான் அச்சுவ கண்ட
னவனுக்கே
ஊழிக் காலம் ஓடின வென்னும்
உரையாலும்
தாழிக் கோலப் போதன கண்ணாள்
தருவாளோ
சூழிக் கோலச் சூழ்களி யானைச்
சுடர்வேலோய். 76.

சூழி கோலம் - நெற்றிப்பட்டத்தின் அணியைக் கொண்ட, சூழ் களி யானை - பொருந்திய மதத்தையுடைய யானையையும், சுடர் வேலோய் - ஒளிபொருந்திய வேலையும் உடைய மன்னவனே, ஆழி கோமான் - திகிரி வேந்தனாகிய, அச்சுவகண்டன் அவனுக்கு - அச்சுவகண்டன் என்னும் அவனுக்கு, ஊழி காலம் ஓடின - மிகவும் அதிகம் வயது சென்று விட்டது, என்னும் உரையாலும் - என்று சொல்லப்படுதலாலும், தாழி கோலம் போது அன்ன கண்ணாள் - சட்டியில் வைத்து வளர்க்கப்பட்ட அழகிய (கருங்குவளை) மலரையொத்த கண்ணையுடைய நம் மகள், தருவாளோ - அவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதற்கு உரியவள் ஆவளோ? (ஆகாள்)

அசுவகண்டன் மிகவும் வயது சென்றவனாதலாலும் சுயம்பிரபை மிகவும் இளம்பிராயத்தினள் ஆதலாலும் இருவருக்கும் மணம் பொருந்தாது என்றவாறும்.

314. கண்ணார் கோதைக் காமரு வேய்த்தோட்
கனகப்பேர்
மண்ணார் சீர்த்திச் சித்திரையென்னு
மடமாதின்
றெண்ணா ரின்பக் காதலியாகி
யியல்கின்றாள்
பெண்ணார் சாயல் பெற்றனள் தேவிப்
பெரும்பட்டம். 77.

(அவனுக்கு) இன்று - இப்பொழுது, பெண் ஆர் சாயல் - பெண்தன்மை நிரம்பிய சாயலை உடைய, மண் ஆர் சீர்த்தி - உலகமெங்கும் நிரம்பிய பெரும்புகழோடுங்கூடிய, கண் ஆர்கோதை - பார்ப்பவரின் கண் தன்னிடத்தே நீங்காது பொருந்தப்பெற்ற கூந்தலையும், காமரு வேய் தோள் - விரும்பத்தக்க மூங்கிலைப் போன்ற தோள்களையும் உடைய, பேர் கனக சித்திரை என்னும் - கனக சித்திரை யென்னும் பேரைப் பெற்ற, மடமாது - இளமை வாய்ந்த தெரிவை, எண் ஆர் இன்பம் காதலி ஆகி - மனம்பொருந்திய இன்பங்களைத் தரும் மனைவியாகி, தேவிப் பெரும்பட்டம்

பெற்றனள் இயல்கின்றாள் - பட்டமகிஷி யென்னும் பெரிய பட்டத்தைப் பெற்றிருக்கின்றாள்.

சாயல், கோதை, தோள், சீர்த்தி சித்திரை யென்னும் மடமாது இன்று காதலியாகித் தேவிப்பெரும் பட்டம் பெற்றனள் இயல்கின்றாள்; என்றுகூட்டி முடிக்க.

---

315. வானோ ருட்கு மக்களொரைஞ்ஞூற்
றுவர் தம்முள்
ஈனோ ருட்கு மிரத்தின கண்டன்
எனநின்றான்
ஏனோ ருட்கு மின்னிள வேந்தாய்
இயல்கின்றான்
ஊனோ ருட்கு மொண்சுடர் நஞ்சூ
றொளிவேலோய். 78.

ஊனோர் உட்கும் - உடலை யுடையவர்கள் கண்டு அஞ்சும், ஒண் சுடர் ஒளி - ஒளிபொருந்திய சுடரோடு கூடிய, நஞ்சு ஊறு - விஷம் பூசப்பட்ட, வேலோய் - வேல் வேந்தே, வானோர் உட்கும் - தேவர்களும் தம்மைக்கண்டு அஞ்சும், மக்கள் ஐந்நூற்றுவர் தம்முள் - அவனுடைய மக்கள் ஐந்நூறுபேர்களுள், ஈனோர் உட்கும் - இவ்வுலகத்தவர் கண்டு அஞ்சும், இரத்தின கண்டன்என நின்றான். இரத்தினகண்டன் என்னும் பெயர் கொண்டிருப்பவன், ஏனோர் உட்கும்-மற்றையவர் யாவரும் அஞ்சும், இன் இளவேந்தாய் இயல்கின்றான்-இனிய இளவரசனாக இருக்கின்றான், என்றான்.

ஞூறு - நூறு (போலி). 'நஞ்சு' என்பதை ஆகுபெயராக்கிக் 'கொலைத்தொழில்' என்று கொள்ளினும் அமையும்.

---

316. அன்னா னாயின் ஆதலின் நன்றே
அவனல்லால்
என்னா னாவான் என்றனன் வேந்தன்
எனலோடும்
இன்னா னின்னான் இந்நகராள்வான்
இவனென்றே
அன்னா னன்னாற் கந்நகரெல்லாம்
அறிவித்தான். 79.

வேந்தன் - அதைக்கேட்டுச் சடியரசன், ஆதலின்-அவ்வாறாயின், அன்னான் - அந்த இரத்தினகண்டன், ஆயின் நன்றே - இவனுக்கு நாயகன் ஆனால் நலமாகும். அவன் அல்லால் - அவனையன்றி, என்னான்-வேறு எவன், ஆவான் - நாயகனாகத்தக்கவன், ஆவான் - ஆவான், எனலோடும்-என்று கேட்டவுடன், அன்னான்-பவச்சுதன், அன்னாற்கு - அரசனுக்கு, இன்னான் இன்னான் இவன் இநகர் ஆள்வான்-இவன் இன்னான் இந்த நகரத்துக்கு அரசன் என்று-அந்நகர் எல்லாம்-அவரவர்களுடைய (பெயர்) நகர் முதலியவற்றையெல்லாம், அறிவித்தான் - சொன்னான்.

அன்னான், என்னான், இன்னான் - அவன் எவன், இவன்.

---

317. மையார் சென்னி மால்வரையாளும்
வயமொய்ம்பிற்
கையா ரெஃகிற் காளைக டம்முட்
கமழ்கோதை
மேய்யா மேவு மேதகுவானை
மிகவெண்ணிக்
கொய்யா விம்முங் கொங்கலர் தாரோய்
கொடுவென்றான். 80

கொய்யா - கொய்யப்படாத, கொங்கு விம்மும் அலர் தாரோய் - மிக்க வாசனை பரவும் பூமாலையை அணிந்த மன்ன, மை ஆர் சென்னி மால்வரை ஆளும்-மேகம்நிறைந்த உச்சியையுடைய பெரியமலைமேலுள்ள வித்தியாதர உலகத்தை அரசாளும், வயம் மொய்ம்பின் - வலிபொருந்திய தோளையும், கை ஆர் எஃகின் - கையிற் பொருந்திய வேலையும் உடைய, காளையர் தம்முள் - யௌவன பருவ வீரர்களுள், கமழ் கோதை - வாசனையோடு கூடிய கூந்தலையுடைய சுயம்பிரபை, மெய்யா மேவும் - மெய்யன்போடு விரும்பத்தக்க, மேதகுவானை - மேன்மைவாய்ந்தவன் ஒருவனை, மிக எண்ணி - நன்றாக ஆலோசித்துத் தேர்ந்து, கொடு - மணஞ்செய்து கொடு, என்றான் - என்று சொன்னான்.

வரை - ஆகுபெயர். வயம் - வலிமை என்றுமாம். கொங்கு - தேனுமாம்.

ஊழ்வினையும் ஆள்வினையும்

[588-வது பக்கத் தொடர்ச்சி]

நாம் முன்பிறவியில் ஒருவனைக் கொலைசெய்ததாக வைத்துக்கொள்வோம். இப்பொழுது அதனை நாம் அனுபவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். எவ்வாறெனின், நாம் சோரத்வமாம் தீச்செயலைச் செய்துகொண்டிருந்தால், அப்பொருளுக்குரியான்கண் அகப்பட்டு அவனால் கொலைசெய்யப்படுவோம். அன்றி, கோயில்திருப்பணி அனையவோர் நற்செயலை நாம்செய்துகொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோமெனின் ஓர் கல்லொடிந்துவிழுந்து மரணமடையப்பெறப்படுவோம். ஊழின் பயனை எவ்வகையிலும் உண்டேதீர்தல் வேண்டும். எனினும், கள்ளனுதற்கும் கடவுள் தொண்டனுதற்கும் நமக்கு உரிமையுண்டு. அவ்வாறே ஆவி துறக்கும் அரும்பசியாளர்க்கு அன்னமளித்து ஆதரித்ததாக வைத்துக்கொள்வோம். அப்பயன் இப்பிறவியில் எய்துங்கால், தீச்செயலாகும் வேசையர் உறவு உள்ளனுயின் அவளோடினிதமர்ந்து பாயசாதி பரமான்னத்துடன் உண்டு நாம் களிப்போம். நற்செயலாகும் நல்லவர்தம் தொடர்பு நனியுடையோமாயின் இல்லை பிதனினும் சூரிகள் (வைகுண்ட வாசிகள்) இன்பமும்என்று உரையாடி அவரால் முக்கனியொடு பாலன்னம் முகமலர்ந் தினிதுஊட்ட உண்டு களிப்போம். கணிகையர் இன்பம் காமுறுதற்கும் தொண்டர்தம்நட்பில் தோய்ந் தின்புறுதற்கும் நமக்கு உரிமையுண்டு. ஆதலான் நாம் எவ்வினையை முயல்கின்றோமோ அதன் சார்பாக ஊழின்பயன் நுகரப்பெறுகின்றோம். அப்படியாயின் நம் கருத்தின்படி நல்லனவே செய்ய எண்ணினும் இயலாதபோதற்குக் காரணம்-யாது என்று வினவலாம். அதற்குக்காரணம் அறிவு தெளிந்து திண்மைபெறாமையே. சுருட்டுப் பிடிக்கும் பழக்கமுண்டான ஒருவன் மிகச் சில நாட்களில் பழ

க்கயதனை விடப் பலநாட்களும் பெரும்பிரயாசையும் வேண்டியிருக்கின்றது. விட்ட சிறிதுபொழுதிலும் சுருட்டைப் பிடிப்போமா என்று நினைக்கவே நேரும்; அந்நினைவு தோன்றும்போதெல்லாம் அதன் தீமையை நினைந்துநினைந்து வேண்டாம் என்று வெறுத்து உள்ளத்தை உறுதிபடுத்தவேண்டும்; இவ்வாறு செய்து வந்தால் அது அறவே ஒழிந்துவிடும். இதற்கே இவ்வாறாயின் பிறவிகள்தோறும் செய்த தீச்செயல்களின் பழக்கத்தை மாற்றுதற்கு எவ்வளவு முயற்சி வேண்டுமென்று நினைக்கிறீர்கள். ஒவ்வொருமுறை சுருட்டுப் பிடித்தல் ஒவ்வொரு 'கன்மம்' ஆகும். இவ்வாறு பற்பல முறைகள் பிடித்தலே 'பழக்கம்' ஆகும். இப்பழக்கத்தை மாற்றுவதற்கே முற்படுதல் வேண்டும். சுருட்டுப் பிடித்ததால் காசநோய் வந்ததென்று வைத்துக்கொள்வோம். அதை நாம் அனுபவித்தே தீர வேண்டும். அதனைத் தீயது என்று தெளிந்தபின்னர் விலக்கினோம். பிடித்துக்கொண்டிருந்த பழக்கமானது அடிக்கடி நம் நினைவில் வருகின்றது. அதைத்தான் விலக்குதற்கு அறிவும் ஆற்றலும் மிகவும் வேண்டும், செய்ய இயலுவதுமாகும். ஆதலான் பல்லாயிரங் கோடிப் பிறவிகளிலே நாம் செய்த வினையின் பழக்கம் எதுவோ அது இப்போதும் செய்யத் தூண்டுகின்றது. அதைத்தான் கொள்ளற்கும் தள்ளற்கும் ஆனவற்றையறிந்து செய்யவேண்டும். இதற்குச் சுதந்திரம் நமக்குண்டு. இப் பழக்கத்தைத்தான் 'வாதனை' என்பர். இதனைத் தனிப்பெருந் தத்துவம் தன்னகங் கொண்ட 'ஸ்ரீ வசன பூடணம்,' 'ஆசார்ய ஹ்ருதயம்' முதலான க்ரந்தங்களுக்கு அரியதொரு வியாக்யானம் அளித்தருளிய விசதவாக்கிய சிகாமணியாகிய மணவாள மாமுனிகள் ஆர்த்திப்ரபந்தத்தில்,

வாதனையி லூற்றமோ மாளாத வல்வினையோ
ஏதென் றறியேன் எதிராசா—தீதாகும்
ஐம்புலனி லாசை யடியேன் மனந்தன்னை
வன்புடனே தானடரும் வந்து.

என்று அருளுகின்றார்.

வல்வினை நுகர்ந்தே தீரவேண்டிய தாதலின் 'மாளாத' என்ற அடைமொழி தந்தும் 'வாதனை' வெல்லத்தக்க தாதலின் அடைமொழி யின்றியேயும் உரைத்தார். அவ்வாறு தோன்றுகின்ற வாதனை இரண்டாகும். ஒவ்வொரு பிறவியிலேயும் நல்வினை செய்திருத்தலும் கூடும், தீவினை செய்திருத்தலும் கூடும். ஆதலால் அவ்வவ் வினையால் வந்த நல்லவாதனை (சுத்தவாதனை) யென்பதொன்றும், தீய வாதனை (மலினவாதனை) யென்பதொன்றும் உண்டாகும். இதில் சுத்தவாதனையே செய்யத்தக்கது. இதனால் ஜீவன்முக்தராதலும் கூடும். இதனை ஞானவாசிட்டத்தார்,

அலைசெய் வாதனையைச் சேடமற
விடனல்ல தென்றும்
நிலைபெறு முத்தி யென்றும்
நிமலமா நெறியீ தென்றும்
தலைமையோர் பகர்வ ரன்ன
திருவகைச் சனன நல்கி
உலைதரு மலின மொன்ற
தொழித்திடும் சுத்த மொன்றே.
மடமையின் செறிவே மெய்யாய்
மலியகங் காரந் துன்றிப்
படர்தரு பிறப்பை மேன்மேல்
பயில்விக்கு மலின மென்ப
சுடர்மறு சனன நீங்கி
யங்குர மின்றிச் செந்தீச்
சுடமுனை யாவித் தொக்கும்
சுத்தவா தனைய தென்பர்.
மெய்தரி நிமித்த மாகத்
தரிப்பதாம் விளம்பும் சுத்தம்
எய்தினர் பிறவி யான
அனர்த்தத்தி னென்று மெய்தார்
நொய்தினி நோக்க வேண்டும்
நோக்கெலாம் நோக்கி யின்பம்
செய்திடும் சீவன் முத்தி
சேர்ந்தவ ரென்ன லாமே.

என்று கூறுகின்றார்.

சுத்தவாதனை மிகுதியாக உடையோமாயின் அது நல்லனவேசெய்ய நம்மைத் தூண்டுகின்றது. அந் நற்செய்கையினால்,வறுத்தவிதை எவ்வாறு முளைக்காதோ அதுபோல் நம் பிறவிகள் முளைக்காது மாய்கின்றன. தீயவாதனை இருந்து தூண்டுமேனும் அதை மாற்றி நாம் நல்வினை புரிவோமானால் நல்லவாதனை மிகுத்து நல்லனவே செய்து நன்னிலை யெய்துவோம். தீய வாதனையைத் தேய்ப்பதற்கு நல்ல வாதனையே கருவியாகும். இதனை விவேகாநந்த ஸ்வாமிகள்,

முள்ளினை முள்ளாற் களைவது போல
நற்றொழில் தன்னால் தீத்தொழில் களைந்தபின்
பற்றறுத் தமர்தல் மெய்த்தவர் நெறியே.

என்றருளினார். வடக்கிருந்தானும்,

செய்குவம் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே

நல்வினை செய்வோமா வேண்டாவா என்கின்ற சந்தேகம் நீங்காதார் மாசுடைய மனமுள்ள தெளிவில்லாதோ ராவர் என்கிறார். மேலும்,

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே.

யானை வேட்டைக்குச் சென்றவன் யானையைப்பிடித்து வருதலும் உண்டு. அற்பமாகிய சிறு காடை வேட்டைக்குச் சென்றவன் வறுங்கையோடு வருதலுமுண்டு. ஆதலால் அரியதும் உயர்ந்ததுமான நல்வினையே செய்யுங்கள் என்ற கருத்துப்படப் புகன்று அது பலிக்கப் பெறுவீரானால் "தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்" உம்பருலக இன்பமும் நுகர்தல் கூடும் என்கிறார்.தவிர, நீங்கள் அரியவினை யாற்றியதினால் 'இமயத்துக் கோடுயர்ந்தன்ன தம்மிசை நட்டுத் தீதில் யாக்கையோடு மாய் தவத்தலை,'' இமயமலைச் சிகரம் ஓங்கினாற்போன்ற பூதஉடல் அழியினும் அழியாது 'நிற்பதேது கொல்' என்று வினவிய தருமனுக்கு யமதருமன் கூறிய 'நீடிசை யொன்றுமே நிற்கும்' என்ற தமது புகழை நிலைநிறுத்தி வசையிலாது உடம்பொடுகூடி நின்றிருத்தலே மிகத் தலையாயது. அதனால் எவ்வாற்றானும் நல்வினை செய்தல் அழகிது என்றார். ஆதலால் இச்செவ்வி வாய்ந்த 'நரிவெரூஉத்தலையார்' உலகினர் செய்யும் தீமையை நோக்கி, அந்தோ இவர்கள் இம்மையில் இசையுமிழந்து மறுமையில் 'தொய்யா வுலகத்து நுகர்ச்சியுமிழந்து' கணிச்சிக் கூர்ம்படை கடுந்திற லொருவன் பிணிக்குங்காலை யிரங்குவார்களே' என்று ஏங்கி அவர்களை விளித்து, 'நல்லது செய்தல்

188929
NRSKN
N31'431

ஆற்றீ ராயினு மல்லது செய்த லோம்புமின்' (நல்லது செய்ய இயலாவிட்டாலும் தீயது செய்வது விலக்குங் கள்) 'அது எல்லாரு முவப்பது' 'நல்லாற்றுப்படூஉம் நெறியுமாகும்' என்று கேட்டுக்கொள்ளுகின்றார். இவ் வாறு அவர்கள் இரங்குவதுந்தவிர, தமக்குத் தீங்கு செய்தாரிடத்தும் மிகப்பரிவு பாராட்டுகின்றார்.

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉம் சான்றோர் கடன்.

தம்மை யிகழ்ந்தவர்கள் அதன் காரணமாய் அத்தீ வினைப்பயன் துய்க்க 'எரிவாய் நிரயத்தில் வீழ்வார் களே' என்று வருந்துகின்றார்கள். ஊழின் தத்துவ மறிந்த மாண்புடைய மக்களின் அறிவு இவ்வாறெல் லாம் செல்கின்றது. ஈண்டு இன்றியமையாது குறிப் பிடத்தக்க சரிதம் ஒன்றுண்டு.

திருநெடுந்தாண்டகமும் கற்றேமென்று வேதாந்தி யின்பால் கூறுங்கள் என்று இறுமாந்த இளஞானக் கன்றும் 'பட்டர்'பெருமான்பால் பகைமை கொண்ட வீரசுந்தரன் இறந்துபோக, அச்செய்தியை அறிந்த பலர் பகவத்அபசாரத்திலும்பாகவதபசாரம்கொடியது என்று கூறலாயினர். பட்டர் சிஷ்யர்களிற் சிலர் 'பட் டருடைய பகைவன் பட்டான்' என்று மகிழ்ந்து ஆர வாரித்து அவர் திருத்தாயாரான ஆண்டாள்பக்கல் சென்று செய்திசொல்ல, அது கேட்டவுடன் ஆண் டாள் திருவுள்ளங்கலங்கித் தம் திருமாளிகையினுள் ளே புகுந்து கதவை மூடிக்கொண்டு வயிறுபிடித்து வாய்விட்டுப் பெருங்குரலாகக் கதறி யழத்தொடங்கி னாள். குதூகலங்கொண்டு கூத்தாடுகின்ற அடியார் கள் அதனைக் கண்டு இது என்னென்று சங்கித்து ஆண்டாளை நோக்கிப் பட்டரை இங்கிருக்க வொட் டாமல் நலிந்த பாவி போனானென்பதுபற்றி மகிழாது அது குறித்துப் புலம்புவானேன். பட்டருடையபகை வன் ஒழிவதும், அவர் இங்கு மீண்டு எழுந்தருள் வதும் நாங்களனைவருங் கூடிவாழ்வதும் உமக்குப் பிரியமில்லையோ, என்று வினவினர்கள். அதற்கு ஆண் டாள் "பிள்ளைகாள், நீங்கள் ஒன்றும் அறியாதிருக் கின்றீர்களே. வீரசுந்தரன் நேரே ஆழ்வாருடைய சிஷ்யனாயிருந்தும் அவருக்கு அந்தரங்க சிஷ்யரான பிள்ளைப் பிள்ளை ஆழ்வான் பக்கல் அபசாரப்பட்டு, ஆசாரிய புத்திரன் திண்டாட்டங்கண்டு அவர் திறத் திலே மிகவும் அபராதம்பண்ணிப் பின்பாவது 'அறி யாமற் செய்தேன் பொறுத்தருளவேணும்' என்று அவர் பாதத்தில் விழுந்து வணங்குவதும் செய் யாமலே 'இப்படிச் செய்தோமே' என்கின்ற அநு தாபமும் இல்லாமலே மாண்டுபோனான். ஆதலால், அவனுயிர் உடலைவிட்டபோதே யமதூதர்கையி லகப்பட்டு, கலங்கி அடியுண்டு மிக வருந்தும். பகவத் தொண்டு செய்கின்றவரும் பாகவதாபசாரப் படுவாராயின், அவருடைய ஆத்மா ஈடேறுதன்றோ? ஆதலால், அவன் மறுமையின்பத்தை யிழந்தான். இன்னும் சிலநாளாவது இவ்வுலகிலிருந்து இம்மை யின்பத்தையாவது அனுபவிப்ப னென்றிருந்தேன். அதனையு மிழந்துவிட்டானே. ஆழ்வான் சம்பந்த முடையதோர் ஆத்மா இப்படி இருமையு மிழந்து சீர் கெட்டதே! என்பதை நினைந்து என் வயிறு எரிகிற வகை உங்களொருவருக்கும் தெரியவில்லையே" என்று சொன்னார். இதனால் பிறர்க்கு இரங்கும் பெரியோர் திருவுள்ளப்பாங்கு தெரிகின்றதல்லவா?

ஆண்டாள்

I. பிறப்பும் இளமையும்

1. ஆண்டாள் திருவவதாரம்.

தமிழ் நாட்டில் கவித்திறம்வாய்ந்த மகளிர் எக்காலத் திலும் சிற்சிலர் உளர். மதுரைச் சங்கத்திலும் கவிப்புலமைவாய்ந்த பெருமாட்டிகளுண்டென்பது விளங்குமாயின் தமிழ்நாட்டிற் பெண்பாலரும் ஆண் மக்கள்போல் அக்கால உத்தமக்கல்வி வாய்ந்திருந்தன ரென்பதற்கு ஐயுறவில்லை. சங்கநூற்கள் வாயிலாய்ப் பல பெண்கவிகளைக் காண்கின்றோம். காரைக்காலம் மையார்போன்ற சிவனடியார்களும் பலர் இருந்திருக்க லாமென அநுமானிக்கின்றோம். ஔவையார் போன்ற நீதிபோதகாசிரியர்களும் பலரிருந்தனரென்பதும் நாம் அறிகின்றோம். இத்தகைய தமிழ்நாட்டுப் புண்ணிய வதிகளிடையே நடுநாயகமாயும் முத்தமிழ்க்கவியா யும் * செந்தமிழச்செல்வியாயு முள்ளவர் †நாச்சியார் ஒருவரேயாம்.

இத்தகைய பேரொளிச் செல்வம் எத்தாயின் உத ரத் திருந்ததோ அறியோம். உலகமாதாவாகிய பூமி பிராட்டியாரே இவ்வாறு அவதரித்தனர் போலும். ஸ்ரீ வில்லிப்புத்தூர் என்னும் திருப்பதியிலே பட்டர்பிரா னான விஷ்ணுசித்தர் தன் வழிபாட்டிற்கமைந்த வோர் துளசிவனத்தைச் சீர்திருத்தச் செல்லுகையில், தனக் கென்று கடவுள் வைத்ததுபோல் ஒருகுழவி யிருக்கக் கண்டனர். அவர் பார்ப்பன சீலராயிருந்தும் இந்த மகவு எக்குலத்தவள் பெற்றதோ வென்று சற்றேனும் எண்ணாமல் எம்பெருமான் தனக்கென்று ஈந்த மக ளிவளென் றெடுத்து உவகையோடு தன் திருமாளி கைக்குச்சென்று கோதையென்னும் திருநாமமளித் துத் தான்பெற்ற மகளேபோல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துவந்தார். இம் மகளும் தந்தையை எப்போதும் மறந்ததில்லை. தான் பாடிய பாடல்களின் திருக்கடைக்காப்புச் செய்யுளில் தன்னைக் குறிக்குமிடத்துத் தன் தந்தை பெரியாழ் வாரையும் மொழிந்து அவர் * பெருமையைச் சாற் றுவதையும் காண்போமானால், இவ்வம்மையார் தன்னை மறந்தாலும் † தந்தையை மறவாதவரென்று நாம்அநு மானிக்கலாகும் ‡

இப்பெண்மணியின் திருவவதாரம் கலியுகம்பிறந்த 98-வது வருடமாகிய நளவருஷத்தில் ஆடி மாதத்தில் சுக்கிலபக்ஷ சதுர்த்தசி திதியில் செவ்வாய்க்கிழமை கூடின பூரநட்சத்திரத்தில் என்று நமது முன்னோர் கூறுவர். அதனை ஆராய்ந்தறியப் போதுமான ஆதாரவு கள் நமக்கில்லை. ஆயினும் இவ்வம்மையார் திருமொ ழிகளிலுள்ள அகச்சான்றுகளை நோக்குவோமாயின், இத்தாயார், நமக்கு அவ்வளவு தொலைதூரத்தி லிரா மல் சற்றுஅருகிலேயே காணப்படுகின்றனர். இவர் தமிழ் $ "சங்கத்தமிழ்", என்றதால், சங்கத்தார் கால த்திலிராத விருத்தங்கள், சந்த விருத்தங்கள், முதலி யன பாடிய இவர் கடைச்சங்கத்திற்குப் பின்னாள் பிற்பட்டவரென்பது திண்ணம். ஈதன்றியும், இவர் செய்யுட்களிற் காணப்படும் சொற்றொடர்களும், செய் யுள் நடைகளும், நாம் ஆங்காங்கு உற்றுநோக்கின் கி.பி. நான்குமுதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் தமிழ்நாட்டிலிருந்த கவிவாணர்களின் நூல்களின் நடையுடைகளைப் பிரதிபிம்பிப்பவைகளாய்க் காட்டுகி ன்றன. இத்தாயார் காலத்தில் சாக்கியம் சமணம் முத லிய மதங்கள் பேரொழிந்தனபோலும்; அவை இவர் செய்யுட்களில் எவ்விதக்குறிப்பும் பெறவில்லை $. ஆத லால் இப்பிராட்டியார் திருவவதாரம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்குமுன் அன்றெனக் கூறலாகும்.எத்துணை காலம் நமக்கு முற்பட்டவராயினும், இவ்வம்மையார் பெருமையில் யாதொருமாறுபாடும் காலவரையறை யால் மாறாதாகையால், இவ்விடயத்தில் தமிழபிமானி கள் சற்று ஊக்கத்துடன் ஆராய்வாராக.

நமக்குக் கிடைத்துள்ள சாட்சியங்களை நோக்கு மிடத்து நாச்சியார் திருவவதாரம் பெரும்பாலும் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் ஆரம்பமென்றே கொள் ளல் வேண்டும். அந்நூற்றாண்டில் நளவருஷத்தில் பூர்வபட்ச சதுர்த்தசி-பூரத்தில் மங்களவாரத்தில் "பட்டர்பிரான் கோதை" அவதரித்தன ரெனக் கொள்வோம்.

2 கோதையார் இளமையும் அவர் திருவிளையாடலும்.

உலகவாழ்க்கையிற் கட்டுப்படாத பெரியாழ்வார் இம்மகளை எவ்வாறு வளர்த்தனரென்று யோசிக்கு மளவில், கோதையார் திருப்பாசுரங்களில் தோன்றும் விஷயங்கள் மிகவும் ஆச்சரியத்தைத் தருகின்றன. பிள்ளைபெறுதவர்கள் வளர்த்ததுபோல் இவரை அவர் வளர்க்கவில்லை. பலகாலம் தவஞ்செய்து பெற்ற மக்களைத் தாய்தந்தையர் எவ்வாறு செல்வாக்குடன் வளர்ப்பார்களோ, அவ்வாறே பெரியாழ்வார் இப்புத் திரியை வளர்த்தனர். இவர் வளர்ந்த திருமாளிகை பொலிந்து தோன்றும் பொருப்பன்ன மாடம் * என் பதற் கையுற வில்லை. இதைச் சுற்றிலும் மென்னடை யன்னம் † பறந்து விளையாடும். மாளிகையைச் சூழ்ந் துள்ளசோலைகளில் புன்னைகுருகு அத்தி முதலிய மரங் களிற் கூவும் குயிலோசையும், போதலர் காவில் புது மணநாறப் பொறிவண்டுசள் காமரம் பாடுமோசையும் பிரணவ வொலிபோற் கிளர்ந்து இசைத்தன. இல்லத் திடைமிய குழந்தைக்கு விளையாட்டுக்கென்றமைந்த

*சந்தொடு காரகிலும் - சுமந் - துதடங் கன்பொருது
வந்திழி புஞ்சிலம்பா - றடை - மாலிருஞ் சோலைநின்ற
சுந்தர னைச்சுரும்பார்-குழல் - கோதைதொ குத்துரைத்த
செந்தமிழ் பத்தும்வல்லார் - திரு - மாலடி சேர்வர்களே
நாச்சியார் 9-வது திருமொழி-சிந்தூரச் செம்பொடி 10.

[குறிப்பு:—இப்பதிகத்தைக் கலிவிருத்த மென்றும், அபு ரூபாரகம்-ரூபகதாளமென்றும் பிரதிகளிற் காணப்படினும்: சந்தவிருத்தமாய்க் கொள்வதுடன், சுந்தரமூர்த்தி நாயனா ரால் கீர்த்திபெற்ற நட்டராக சந்தத்திற் பாடுவதே இவ்வம் மையார் இசைக்கு நன்கு பொருந்தும்.]

† "நாய்ச்சியார்" என்று பிரபந்தங்களிற் காணப்படினும் யகர மெய்யை நீக்கி, உலகவழக்கில் கூறப்படும் "நாச்சி யார்" என்னும் மொழியே, இவர் திருநாமமாக அடி யேன் கொண்ட காரணம் பின் அத்தியாயத்திற் காண்க.

* i நாகத்தி னணையானை நன்னுதலாள் நயந்துரைசெய்
மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதைதமிழ்
ஆகத்து வைத்துரைப்பா ரவரடியா ராகுவரே.
8-வது திருமொழி - மேகவிடுதூது 10

ii ஆயனுக் காகத்தான் கண்டக னாவினை
வேயர்பு கழ்வில்லிப் புத்தூர்கோன் கோதைசொல்
தூயத மிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயுநன் மக்களைப் பெற்றும கிழ்வரே.
6-வது திருமொழி - வாரணமாயிரம் 10.

† i செம்மை யுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்
தம்மை யுகப்பாரைத் தாமுகப்பா ரென்னுஞ்சொல்
தம்மிடையே பொய்யானால் சாதிப்பா ராரினியே.
11-வது திருமொழி - தாமுகக்கும் 10.

ii நல்லவென் தோழி நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர்சிறு மானிடவர்நாம் செய்வதென்?
வில்லிப் புதுவை விட்டுசித்தர்தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரே லதுகாண்டுமே.
10-வது திருமொழி - கார்க்கோடல் பூக்கள் 10.

‡ இக்கருத்தே 12-வது திருமொழியில்
'.................... ஊமையரோடு செவிடர் வார்த்தை
பெற்றிருந்தானை யொழியவே போய்ப் பேர்த்தொருதாயில்
வளர்ந்த நம்பி'
என்ற விடத்தில் கண்ணனைப்போலத் தனக்கும் பிறந்த இடமொன்று வளர்ந்த இடம் மற்றொன் றென்பதை எண் ணினார் போலும்.

$ வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கட் டிருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை யணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கட் டிருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்!
திருப்பாவை 30.

$ இக்காலம் எங்கும் கோயில்கள் நிறைந்தகாலமாய் விள ங்குகின்றது.

"..............கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய்..." திருப்பாவை 6.

* கருப்புவில் மலர்க்கணை காமவேளைக்
கழலிணை பணிந்தங்கோர் கரியலற
மருப்பினை யொசித்துப்புள் வாய்பிளந்த
மணிவண்ணற் கென்னைவ குத்திடென்று
பொருப்பன்ன மாடம்பொ லிந்துதோன்றும்
புதுவையர் கோன்விட்டு சித்தன்கோதை
விருப்புடை யின்தமிழ் மாலைவல்லார்
விண்ணவர் கோனடி நண்ணுவரே.
1-ம் திருமொழி - தையொருதிங்கள் 10.

† மென்னடை யன்னம் பறந்து விளையாடும்
வில்லிப்புத்தூ நுறைவான்றன்
பொன்னடி காண்பதோ ராசையி னாலென்
பொருகயற் கண்ணிணை துஞ்சா.
5-வது திருமொழி -(மன்னு பெரும்புகழ்) 5.

பஞ்சரத்துள் * பேசுங்கிளி "கோவிந்தா! கோவிந்தா! உலகளந்தானே!" என்று கூவும். அதற்கு நாச்சியார், $ இன்னடிசிலோடு பால்கலந் தூட்டுவது முண்டென்றால், இவ்வம்மையாருக் குணவுப்பொருள்களில் யாதொருகுறைவுமின்றிப் பட்டர்பிரான் வைத்திருந்தனரென்பதும் சந்தேகமோ?

இக்காலத்தைப் போலவே, கோதைநாயகியாரும் அக்காலத்தில் தன் சிறுவயதில் † பந்துவிளையாட்டில் பொழுதுபோக்குவதும், தோழிமாருடன் பற்பல ஆட்டங்களிலமைந்து மகிழ்வதும், ஆண்டாள் திருப்பதிகங்களில் ஆங்காங்கு வெளியாகின்றன. இவர் சிற்றில் கட்டி விளையாடுவதில் மிகவும் சிறந்தவர். ‡ இதனில் முதுகுநோக நாள்முழுவதும் பொழுதுபோக்குவர். † இவ்வாறு தான் குழந்தைப்பருவத்தில் ‡ விளையாடிய விளையாட்டை (2-வது திருமொழியாகிய) "நாமமாயிரம்" என்னும் திருப்பதிகத்தினுள் காணலாம். மணல் $ குவித்துத் தான் கோலிய சிற்றிலின் அலங்காரத்தை நினைத்துப் பாடினர் அப்பதிகம் என்று நாம் அநுமானிக்கலாம். கல்வியிற் புகுதற்கு முன்னமேயே இச் சிறுமி கட்டிய சிற்றில் எவ்வளவு கலையிலக்கணங்களுடன் § விளங்கியதோ, அவ்வாறே இவர் பின்னாட்களிற் பாடிய திருப்பதிகங்களும் இயற்கையாக அலங்காரங்களுடன் விளங்கலாயின.

* கூட்டிலி ருந்துகி ளியெப்போதும்
    கோவிந்தா கோவிந்தா வென்றழைக்கும்
ஊட்டங்கொ டாதுசெ றுப்பனாகில்
    உலகளந் தானென்று யரக்கூவும்
நாட்டில்த லைப்பழி யெய்தியுங்கள்
    நன்மையி ழந்துத லையிடாதே
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்துதோன்றும்
    துவராபதிக் கென்னை யுய்த்திடுமின்.

12-ம் திருமொழி - மற்றிருந்தீர் 9.

$ ...இன்னடி சிலொடு பாலமு தூட்டியெ
    டுத்தவென் கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே
    உலகளந் தான்வரக் கூவாய்.

5-வது (மன்னுபெரும் புகழ்) திருமொழி 5.

† பந்தார் விரலிஉன் மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார்வளை யொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 18

[குறிப்பு:-அக்காலத்தில் பந்துவிளையாடல் செல்வம்நிறைந்த வீடுகளிலே காணலாம். "பந்தணை விரலாள் பாண்டிமாதேவி" என்னும் சம்பந்தர் சொற்றொடரையும் நோக்குக]

‡ வட்டவாய்ச்சிறு தூதையோடு
    சிறுசுளகு மணலும்கொண்
டிட்டமாவிளை யாடுவோங்களைச்
    சிற்றிலீடழித் தென்பயன்
தொட்டுதைத்துநலி யேல்கண் டாய்சுடர்ச்
    சக்கரங்கையி லேந்தினாய்
கட்டியுங்கைத் தாலின்னாமை
    யறிதியேகடல் வண்ணனே.

2-வது திருமொழி 8.

† இன்றுமுற்று முதுகுநோவ
    இருந்திழைத்த விச்சிற்றிலை
நன்றுகண்ணுற நோக்கிநாங்கொளு
    மார்வந்தன்னைத் தணிகிடாய்
அன்றுபாலக னாகியாலிலை
    மேல்துயின்றவெம் மாதியாய்
என்றுமுன்றனக் கெங்கள்மேலி
    ரக்கமெழாத தெம்பாவமே.

ஷை 2.

‡ சீதைவாயமுத முண்டா யெங்கள்
    சிற்றில்நீ சிதை யேலென்று
வீதிவாய்விளை யாடுமாயர்சி
    றுமியர்மழலைச் சொல்லை
வேதவாய்த்தொழி லார்கள்வாழ்வில்லி
    புத்தூர்மன்விட்டு சித்தன்றன்
கோதைவாய்த்தமிழ் வல்லவர்குறை
    வின்றிவைகுந்தம் சேர்வரே.

ஷை 10.

$ குண்டுநீருறை கோளரீமதயானை
    கோள்விடுத் தாயுன்னைக்
கண்டுமாலுறு வோங்களைக்கடைக்
    கண்களாலிட்டு வாதியேல்
வண்டல்நுண்மணல் தெள்ளியாம்வளைக்
    கைகளாற்சிர மப்பட்டோம்
தெண்டிரைக்கடற் பள்ளியாயெங்கள்
    சிற்றில்வந் துசி தையேலே.

ஷை 3.

* வெள்ளை நுண்மணற் கொண்டுசிற்றில்வி
    சித்திரப்பட வீதிவாய்த்
தெள்ளிநாங்கள் இழைத்தகோலம
    ழித்தியாகிலு முன்றன்மேல்
உள்ள மோடியுருக லல்லாலுரோட
    மொன்றுமி லோங்கண்டாய்
கள்ளமாதவா கேசவாவுன்முகத்
    தனகண்க ளல்லவே.

ஷை 5.

யாப்பிலக்கணம்

செய்யுள்—வெண்பா

[592-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

சென்றவாரம் சிந்தியல்வெண்பாவின் இலக்கணத்தைக் கூறினோம். அச் சிந்தியல்வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்றும் நேரிசைச் சிந்தியல்வெண்பா என்றும் இருவகைப்படுவதையுங் கண்டோம்.

வெண்பாவின் பொதுவிலக்கணங்களைப் பெற்று, இரண்டாமடியினீற்றில் மாத்திரம் தனிச்சொல் உடையதாய், ஒரு விகற்பத்தினாலேனும் இரண்டுவிகற்பத்தினாலேனும் அமைந்து மூன்று அடிகளில் முடிகின்ற வெண்பா நேரிசைச்சிந்தியல்வெண்பா.

இதற்குமாறாக மூன்றடியில் வருகின்ற வெண்பாக்களெல்லாம் இன்னிசைச் சிந்தியல்வெண்பாக்கள் எனக் கொள்க. ஆதலின்,

1. எவ்வடியினும் தனிச்சொல் பெறாது ஒரு விகற்பத்தாலேனும், இரு விகற்பத்தாலேனும், பலவிகற்பத்தாலேனும் வருவனவும்,
2. இரண்டா மடியில் தனிச்சொல் பெறாது, முதலடியில், அதன் மூதற்சீரோடு ஒரூஉ எதுகையாய்த் தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தாலேனும் இரு விகற்பத்தாலேனும் பலவிகற்பத்தாலேனும் வருவனவும்,
3. முதல் இரண்டடிகளிலும் தனிச்சொற்கள் பெற்று, ஒரு விகற்பத்தாலேனும் இரு விகற்பத்தாலேனும் பல விகற்பத்தாலேனும் வருவனவும்,
4. இரண்டா மடியில் மாத்திரம் தனிச்சொல் பெற்றிருப்பினும் பல விகற்பங்களால் வருவனவும்,

இன்னிசைச் சிந்தியல்வெண்பாக்க ளாகும்.

குறிப்பு:—

சென்றவாரம், சிந்தியல் வெண்பாவின் பிரிவுகளைக் காட்டிய படத்தில், பலவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா, என வரைந்திருப்பது, அங்குக் காட்டியிருக்கின்ற இலக்கணத்திற்கு மாறான பிழையாகும். ஆகையால் அதனைப் பின்வருமாறு மாற்றிக் கொள்க.

- சிந்தியல் வெண்பா
  - இன்னிசைச் சிந்தியல் வெண்பா
    - ஒருவிகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா
    - இருவிகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா
    - பலவிகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா.
  - நேரிசைச் சிந்தியல் வெண்பா
    - ஒருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா
    - இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா

நேரிசைச் சிந்தியல்வெண்பாக்களின் இலக்கணமும் உதாரணமும் சென்றவாரம் செப்பினோம். இனி இன்னிசைச் சிந்தியல் வெண்பாக்கள் சிலவற்றைக் காண்போம்.

1. வழிமதுத்தார் மாறன் மணிவரைமேன் மாதர்
விழியெழுதி னாலுமிணை வெற்பெழுதி னாலு
மொழி யெழுத லாமோ மொழி.

இது, தனிச்சொல் பெறாது ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

சோலை மலையழகர் தோண்மாலை காமுறுமுன்
மாலையா யாமமாய் வைகறையா யல்கிரவின்
றென்னேநீட் டித்த தெவன்.

இது தனிச்சொல் பெறாது இரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

முல்லை நகைத்தழைக்க வோதை முரல்வண்டு
தேன்பருகி வாழ்த்துரைக்குங் கார்காலஞ் சேர்ந்தக்
வாராரோ நின்கோ மகன். [கால்

இது, தனிச்சொல் பெறாது பலவிகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

2. வெல்லார் விறல்பேசார் காமுறார்—நல்லன
கல்லாதார்ச் சேரார் கருத்தழிந்து கைசோரார்
நல்லார் நயந்த குணம்.

இது, முதலடியில் மாத்திரந் தனிச்சொல் பெற்றுஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

சுரைவாழ வம்மி மிதப்ப—வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இது, முதலடியில் மாத்திரம் தனிச்சொல் பெற்று இரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா—முதலடி ஓர் விகற்பமாயும் பின்னிரண்டடிகள் மற்றோர் விகற்பமாயும் இருப்பது காண்க.

பதிமருண்டு பைத லுழக்கு—மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து மணியிழாய்
ஆற்றுவேன்கொல் காமக் கனல்.

இது, முதலடியில் மாத்திரம் தனிச்சொல் பெற்றுபல விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

3. முருகியம்போல் வான் முழங்கு—நெருங்கு
குருகிலை பூத்தன கானம்—மருங்கு
வருவார்கொ லெற்பிரிந்தோ ரின்று.

இது, முதலிரண் டடிகளிலுந் தனிச்சொற்கள் பெற்று ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

வையக மெல்லாங் கழனியா—வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள்-செய்யகத்து
வான்கரும்பே தொண்டைமா நாடு.

இது,முதலிரண்டடிகளிலும்தனிச்சொல் பெற்றுஇரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

முல்லை முறுவலித்துக் காட்டின--மெல்லவே
சேயிதழ்க் காந்த டுடுப்பீன்ற—போயினர்
இன்றோர் வரவுரைக்குங் கார்.

இது,முதலிரண்டடிகளிலுந் தனிச்சொல் பெற்றுபல விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

4. நாணு நிறையு நறுநுதா லாயிழையாள்
கந்தவெங் காமத் தழல்கதுவ—வெந்து
தருமடன்மா வெற்றந் தரும்.

இது, இரண்டாமடியில் தனிச்சொல் பெற்றிருப்பினும், பல விகற்பத்தால் வந்தமையால் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[531-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

சென்னை-60…

இடவுணர்வு

ஜேம்ஸ் என்ற பெரியார் முன்கண்டவாறு விளக்கிய கொள்கையில் என்ன குறையுள்ளது? புலன்களைப்பற்றி நாம் என்ன கண்டோம்? பொருளைப்பற்றி உணர்வு எழுகின்றது; அவ்வுணர்வைப் பிரித்துப் பார்த்து ஆராயும்போதுதான் புலன்களைப் பற்றிப்பேசுகின்றோம்.உணர்வினின்று வேறாகப் புலன்களை நாம் அறிவதில்லை. புலன்களையறிவது ஆராய்ச்சியின் பயனேயாம். இயற்கையாக எழுவது உணர்வு; செய்கையால் அதனை புலன்கள் எனப் பிரிக்கிறோம். உண்மை யிவ்வாறாக ஜேம்ஸ் என்பார் உணர்வு இயற்கையாய் ஒன்றித்து எழும் என்று தாம் கூறிய உண்மையையே மறந்துவிட்டு, புலன்களே இயற்கையாக எழுகின்றன என்றும் அவற்றின் இயையும் பிரிவுமே இடவுணர்வாம் என்றும் மன்றாடுகின்றார். புலனிலேயன்றோ இடக்குறி விளங்குகிறதென்கிறார். இதன்

பயனாக எத்துணையோ புலன்களை அந்தப் பெரியார் படைத்துள்ளார். "முக்கோணப்புலன், வடிவப்புலன் முறைப்புலன்" என்ற எல்லா வுணர்வுகளையும் புலன்களாக்கி விடுகின்றார். உலகப்பொருள்கள் தாக்கிய போது நமதுமனம் எதிரூன்றி நிற்கின்றது. அவ்வெதிரூன்றலே புலனும். அப்புலன் தனியாக எழுவதில்லை. அது மனத்தின் செயல் என்பதை நினைப்பில் வைத்துக்கொண்டால், மனத்தூண்டற் கொள்கை என்ற மூன்றாவது கொள்கையினுண்மை நன்குவிளங்கும்.

இடவுணர்வு மனதின் செயலால் எழுவது, இடவடிவத்தை மனமே பொருள்களுக்குக் கொடுக்கின்றது. மனதிற்கு அவ்வாற்றல் இயற்கையாகவே இருக்கின்றது. அவ்வாறு தூங்கிக்கிடக்கும் ஆற்றலைப் புலன்கள் எழுப்பிவிடுகின்றன. செம்மை யென்றும் வடிவம் என்றும் வெளிப்பொருள்கள் நமது பொறிகளைத் தாக்கிக் கிளர்ச்சியுறச் செய்கின்றன. அப்புலன்களை மனமானது இடவடிவமாக உணர்கின்றது. [ஹெர்மன் லாட்ஜ். என்பவரே இக்கொள்கையை மிகத்தெளிவாக எடுத்துரைத்தவர்] "இடக்குறிகள்" என்று மேல் நாம் கூறிவந்தசொற்றொடர் இப்பெரியார் படைத்துக்கொண்டதொன்றாகும். பின்வந்தவர், அவருடைய உண்மைக் கொள்கையினை யறியாது இடக்குறியுர் ஒருபுலனே என்று கூறினர். ஆனால் அவர் புலனென்று கூறினர் இல்லை. இரண்டு வேறிடங்களில் உள்ள இரண்டு வேறு வான்மீன்களைப் பார்த்தபோது அவ் வான்மீன்கள் ஒரேவடிவனவாயும் ஒரே தன்மையான ஒளியுடையனவாயும் விளங்கினும், இரண்டாகவே தோன்றுகின்றன. வடிவம் ஒளி முதலியவற்றால் ஒத்துள்ளன என்றும் இடவகையால் அவை வேற்றுமையுள்ளன என்றும் உணர்கின்றோம். இவ்வேற்றுமையை யுணர்த்தும் இயக்கம் யாது? நமது கண்ணில் ஒவ்வொரிடத்திற்கு ஒவ்வோர் இடத்தன்மை யுளதாகின்றது. குறித்த ஓரிடத்தில் செந்நிறவட்டம் ஒன்றைக்காண்கிறேன்; அதை நீக்கியபின் அதே இடத்தில் வெண்ணிற வட்டம் காண்கிறேன். இவ்வாறு பலவேறு வட்டங்களைக் கண்டுவரும்போது பல நிறங்களைக் காண்கிறேன்; ஆனால் ஒரே இடநிலையைத் தான் உணர்கிறேன். இவ்விடநிலையை யுணர்த்துவது தான் இடக்குறி. கண்திரையில் உள்ள ஒவ்வோர் புள்ளிக்கும் ஒவ்வோர் இடக்குறியுண்டு. இவ்விடக்குறி ஒருபுலனன்று; நமது துய்த்துணர்வின் பண்பு அன்று. அஃதொரு நரம்பு இயக்கமாகும். கண்திரையானது தாக்கப்பட்டபோது இந் நரம்பியக்கம் எழுகின்றது. அவ்வியக்கத்தின் சிறப்பியல்பு கண்திரையில் எவ்விடம் தாக்கப்பட்டதோ அதற்கேற்ப மாறுகின்றது. இந்நரம்பியக்கம்தான் எத்தகையதோ? நம்முடைய விழியுருண்டைகள் பல தசைநார்களால் இயக்குண்டு அசைகின்றன. வெளிப் பொருள்கள் நம்முடைய கண்ணில் விழுமானால், உடனே அத்தசைநார்கள் விழியுருண்டைகளை இயக்குகின்றன; கண்ணின் நடுவேயிருக்கும் ஒளியிடத்திற்கு நேராக அவ்வொளிப்பொருள் தோன்றும்வரை கண்ணை அதற்குத் தக்கபடி திருப்புகின்றன. கண்திரையில் நடுவிடத்திற்கு மிகத்தொலைவில் வெளிப்பொருளின் நிழல் விழுமானால், இயக்கம் மிகுதியாகின்றது; அருகில் விழுமானால் குறைகின்றது. எனவே இவ்வியக்கம், கண்திரையில் உள்ள ஒவ்வோரிடத்திற்கும் தக்கபடி வெவ்வேறாக எழுகின்றது. இவ்வியக்கத்தைக் குறித்து நரம்புக்கிளர்ச்சி யெழும்போது ஓரிடத்தில் எழுந்த நரம்புக்கிளர்ச்சி மற்றோரிடத்து எழுந்த நரம்புக்கிளர்ச்சியினும் வேறாகத்தோன்றும். இவ்வேற்றுமையே இடத்தை யுணர்த்தத் துணை செய்கின்றது. இடத்தையுணரும் ஆற்றல் ஒருபுலன் அன்று, மனதின் செயலேயாகும். புலக்கொள்கையின்படி நமது அறிவெல்லாம் புலன்களின் கூட்டமேயாகும். ஆனால் உண்மையில் நோக்குமிடத்து நம்முடைய துய்த்துணர்வெல்லாம் யாதேனும் ஒன்றை யறிவதாகவும் அதைக்குறித்து முயல்வதாகவும் முடிகின்றன. புலன்களோ இந்த அறிதலியங்கல் வடிவமான துய்த்துணர்வு எழுதற்குத் தூண்டுதலாக மட்டுமே விளங்குகின்றன.

உணர்வுஎழும்போது நம்மனம் விழித்துக்கொண்டு செயலுறுகிறது; புலன்களுக்கெல்லாம் ஒரு பொருள் தருகின்றது. மக்டேகல் என்ற பெரியார் காட்டிற்குள் போய்க்கொண்டேயிருக்கிறார். ஏதோ ஓர் ஒலி, ஏதோ ஓர் அசைவு, அவரை வலப்புறமாகத் திரும்பிப்பார்க்கச் செய்கிறது. நிறமும் நிழலும் ஒளியுமாக ஏதோ ஒன்று புலனுகின்றது. மரங்களின் இடையே ஒரு கற்பாறைகாணப்படுகின்றதென்று அசையாமல் எண்ணுகிறார். திடீர் என ஒரு விலங்கு எதிரே நிற்கின்ற தோற்றத்தை உணர்கின்றார். இங்குக் கற்பாறை என்று தோற்றிய புலன்களினும் வேறான புலன்கள் விலங்கெனத் தோற்றியபோது எழவில்லை. முன் தோன்றிய புலன்களுக்கே வேறுவகையிற் பொருள்கொண்டார். கோலத்தினுள் எழுதிய எழுத்தையோ, வடிவையோ கண்டு அறியும்போது, இவ்வாறு நாம் மாறி மாறி யுணர்கின்றோம். முதலில் புள்ளிகளும் கோடுகளும் தோன்றுகின்றன. பின்னர் அங்கு எழுதப்பட்டுள்ள தேரின்வடிவோ யானையின்வடிவோ தோன்றுகிறது. இங்குப் புதுப்புலன்கள் ஒன்றும் எழவில்லை. முன் கொண்ட புள்ளியையும் கோடுகளையுமேபார்க்கின்றோம். ஆனால் நமது மனம் அக்கோடுகளுக்கும் புள்ளிகளுக்கும் வேறொரு பொருளைக் கொடுத்துவிட்டது. விசாகம் என்னும் விண்மீன் குழுவினைப்பார்க்கிறேன். ஏறக்குறைய வட்டவடிவமாக இருக்கக் காண்கிறேன். பூரம் உத்திரம் என்ற விண்மீன்கள் நான்கும் நாற்புறவடிவமாய் விளங்குகின்றன. இவற்றையும், நால்முனை, மும்முனை, வட்டம் முதலிய வடிவங்களையும் கண்டறிந்த சிலர்க்கே இவை இவ்வாறு தோன்றும். மற்றவர்க்கு அவ்வாறு தோன்றுவதில்லை. அவர்கள் தாமறிந்தவகையில் அவற்றை உருப்படுத்திக் கொள்வார்கள். வட்டம் என்பதை உணர்ந்திலாதவன் வட்டவடிவை எவ்வாறு உணர்வான். பழக்கத்தாலோ இயற்கையமைப்பாலோ, தலைமுறைத்தொடர்பாலோ வட்டவடிவை உணருமாற்றல் எனக்கு இருக்குமாயின் அப்புலன் அவ்வாற்றலைத் தூண்டி யெழுப்புகின்றது. அப்புலனுக்கு வட்டவடிவம் என்ற பொருளை என் மனம் கொடுக்கின்றது. ஆகவே, நிலை, வடிவு முதலிய வெல்லாம் மனம்கொடுக்கும் பொருள்களேயாம்.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட்,

சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

எற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலீஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை! நிறைந்த விஷயம்!
சிறந்த கதை! உயர்ந்த பதிப்பு!

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது
மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்

ஸ்ரீமான். மாங்கை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறாஸ்.

- சோப்புகளில் ராஜா -
நாடறிந்தது நல்வரவேற்கப்படுவது
: சிலாக்கியமானது :
டாக்டர் டிராலியின்
- லயன் சோப் -

பார்வைக்கு உன்னதமும், உயர்தரமும் ஆனது.
அதேபோல் உழைப்பிலும் மேலான
குணம் நிறைந்தது.

ஒரு கட்டியாவது இரு கட்டியுள்ள
பெட்டியாவது வாங்குக.

- - எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் - -

Sole Agent :—
A. V. R. A. ADYCAPPA CHETTY,
52, Bunder Street, Madras.

பண்டாரம்
மாந்த எண்ணை

சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு உண்டாகும் மலச்சிக்கல், மாந்தம், இழுப்பு, ஜுரக்கட்டி, முதலியவைகளை ஆரம்பத்திலேயே வரவொட்டாமல் தடுத்துக் குழந்தைகளை நன்றாய்க் காப்பாற்றும் சஞ்சீவி எண்ணை.

விலை அணு **12.** எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.
எம். சி. என்வ். எக்லெக்டிக் பார்மசி & டிஸ்பென்ஸரி,
49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய
திரு அருட்பா
வசனப்பகுதி
ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்
அவர்களது அடக்க விலைப்பதிப்பு.
புஸ்தகவிலை, 4, அணுவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணுவும், ஆக, 5 அணு
தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.
கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

வர்த்தமானம்

இங்கிலாந்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தினம் ஒன்றிற்கு 8 தீக் குச்சிகள் செலவாகின்றனவென்று வியாபார இலாக்காக் கணக்கிலிருந்து தெரிகின்றது.

***

கிரேட் பிரிட்டனில் இப்பொழுது பெண்கள் எல்லா உத்தியோகத்திலும் சேர்ந்துள்ளார்கள். தபால் சேவக வேலையில் மாத்திரம் நாலாயிரம் பெண்கள் அமர்ந்திருக்கின்றனராம். இரயில்வே, டிராம்வேயிலும் பெண்களின் தொகை அதிகமாய் வருகின்றதாம்.

***

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வருஷந்தோறும் வயித்திய ஆராய்ச்சிக்கென ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பவுன் செலவுசெய்துவருகின்றனராம்.

***

பஞ்சாப்பிலுள்ள மூல்டான் என்னுமிடத்தில் இந்து முகமதியச் சச்சரவு வலுத்துவருகின்றதென்றும், அங்கு முகமதிய ஆடவர்களும், முகமதியமாதர்களும் ஹிந்துக்களின் கடைகளில் எவரும் சாமான்வாங்காதபடி மறியல்செய்து வருகின்றனரென்றும் பஞ்சாப் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

ஐரோப்பாவிலுள்ள மாளிகைகளில் ஸ்பெயின் தேசத்து அரசர் மாளிகைதான் மிகப் பெரியதாம். அந்த அரண்மனை முழுதையும் ஒருமுறை சுற்றிப் பார்க்க நான்குநாள் செல்லுமாம். அம்மாளிகை 120 சதுர மைல் கொண்டதாம்.

***

கர்னாடக சங்கீதத்தில் சிறந்தவரென்று பேர்பெற்ற ஸ்ரீ பிடாரம் கிஷ்டப்பா அவர்கள் சென்றவாரம் மைசூரில் தமது இல்லத்தில் காலஞ்சென்றார் என்று மைசூர்ச் செய்தி கூறுகின்றது.

***

மதுரைச் சோக்கநாதர்உலா:-என்ற நூல் இதுவரை வெளிவந்ததில்லை. மகா மகோபாத்தியாய சுவாமிநாத ஐயர் முயன்று பல ஏட்டுப் பிரதிகளைச் சம்பாதித்து இப்பொழுது அதைப் புத்தக ரூபமாய்க் கொண்டுவந்துள்ளார் என்றும் இவ்வெளியீட்டிற்குத் திருப்பனந்தாள் மடத்துத் தலைவர் பொருளுதவி செய்தனர் என்றும் தெரிகின்றது.

***

காசி சமஸ்தான மன்னர் மஹாராஜா பிரதாப நாராயணசிங் பகதூர் சென்றவாரம் இறந்தனர் என்றும், இறக்கும்பொழுது அவர் வயது 75 என்றும், மஹாராஜா அவர்கள் சிறந்த அறிஞர் என்றும், இந்துக் கலாசாலைக்கு அவர் அதிகம் உதவியுள்ளார் என்றும் ஒரு செய்தி கூறுகின்றது.

அண்ணாமலை சர்வகலசாலை அதிகாரிகள் கல்லூரி மாணவர்களில் இன்டர்மீடியட் வகுப்பினர்க்குப் பாடமாகப் பயன்படத் தக்கபடி. தமிழில் தர்க்கசாஸ்திரத்தை (Logic) எழுதுபவர்களுக்கு ரூபாய் ஆயிரம் பரிசளிப்பதாக அறிவித்துள்ளார்கள். அது, அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அனுப்பப்பட வேண்டும். முழுவிவரமும் வேண்டுவோர் ஸர்வகலாசாலையாருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

***

இதுவரை, கப்பலில் பிரயாணம் செய்தல் கூடாதெனவிருந்த ஸ்ரீ மதன்மோஹன் மாளவியா, கடைசியில் வட்டமேஜை மஹாநாட்டிற்குப் போகத் தீர்மானித்துவிட்டனர். தாம் இந்தியாவினின்று போவதற்குமுன் காசி இந்துக் கல்லூரிக் கூட்டத்தில் ஸ்ரீமாளவியா பேசியதாவது:-"நான் இந்துஜன தர்மத்தைக் கடைபிடித்தொழுகுபவன். நான் இதுவரை சனாதனதர்ம வரம்பு கடந்து நடந்தது கிடையாது. இப்பொழுது லண்டன் செல்வதா செல்லாதிருப்பதா என்று பலநாள் யோசித்தேன். தாய்நாட்டின் நலமே வென்றுவிட நான் இதுவரை அருமையுடன் போற்றிவந்த தர்மக்கொள்கையைவிடவேண்டி வந்தது. லண்டன் சென்று என்னால் இயன்றது செய்து திரும்புவேன்"

***

நாஷனல் இன்ஷியூரென்ஸ் கம்பெனி அறிக்கை:-- நாஷனல் இன்ஷியூரென்ஸ்கம்பனியாருடைய 1930 வது வருட அறிக்கை வரப் பெற்றோம். 1930 வருடத்தில் 1, 44, 69, 850 ரூபாய்கு 7915 பேர்கள் இக்கம்பனியில் இன்ஷியூர் செய்திருக்கின்றனர். அவ்வாண்டில் இறந்தவர்களுக்கெனக் கொடுக்கப்பட்ட தொகை 523492-8. இன்ஷியூரென்ஸ் காலம் முற்றியதால் இன்ஷியூர் செய்துள்ள அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை 6, 02, 877-4-0 கம்பெனியின் மொத்த வருமானம், ரூ 747608-9-0. இத்தொகையில் இன்கம்டாக்ஸ் கழிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில்கம்பெனிபாலிஸிஹோல்டர்களுக்கு 100க்கு ரூ 8 வீதம் இலாபம் கொடுக்குமாறு டைரக்டர்கள் சிபார்சு செய்திருக்கின்றனர். இக்கம்பெனி வருடத்திற்குவருடம் நல்ல வளர்ச்சிபெற்று வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். இக்கம்பனிக்கு இந்தியாவின் பல பெரிய நகரங்களிலும் கிளைகள் இருக்கின்றன. சென்னையின் கிளை ஆபீஸ் இப்போது அரண்மனைக்காரன்தெருவில் இருக்கின்றது. இக்கம்பனியில் மோட்டார் வண்டி, மோட்டார் சைக்கிள் முதலிய வாகனாதிகளையும் இன்ஷியூர் செய்வதற்கு வேண்டிய வசதி இருக்கின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடபல்பொடி நஞ்சன்கூடு.
சேல்ஸ் ஏஜண்டுகள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
தித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா.



மதுரை
காஞ்சீபுரம்.

KALANILAYAM.
REG. No., M 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—: வைத்திய ரத்ன :—
பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபால் பெட்டி. 287. மதருாஸ்.
கேட்லாக் இனம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 328, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் தீளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

தமிழன்பர்களே! இவரைத் தெரியுமா?

இவரே தற்காலத் தந்தியையும், டெலிபோனையும் கிராமபோனையும், சினிமாவையும், மின்சார விளக்கையும் கண்டுபிடித்தவர். கம்பியில்லாத் தந்திக்கு வழிகாட்டியவர். ஏழைக் குடும்பத்தில் 1847-ல் பிறந்து, தாய் சொல்லிக்கொடுத்த கல்வியினால் பத்திரிகை விற்பவராயிருந்து எண்ணிலாப் புதுமைகளைச் செய்து அமெரிக்காவில் பெருஞ் செல்வராய்த் திகழும்,

தோமாஸ் ஆல்வா எடிசன்

இவருக்கு இப்போது வயது 84. இன்னும் ஊண் உறக்கமின்றிப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து வருகின்றார். இப்போது இலைகளினின்றும் ரப்பர் எடுக்க முயற்சிக்கின்றார். இவர் ஹென்ரி போர்டுக்கு நண்பர்.

இவரது வரலாறு படிக்கப்படிக்க இன்பந்தரும். ஆப்டோன் படங்களுடன் உயர்ந்த காகிதம் அழகிய கட்டடம். விலை ரூபா 1-4.

தபாற் செலவு அணா 4.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)